விலை ரூபா: 8.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

கோ
சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தர
தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது

பக்கங்கள்:- பன்னிரண்டு
சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 02 செவ்வாய்க்கிழமை (15.03.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 86

# புலிகளின் விமானங்களை ஒரு விநாடியில் அழிப்போம்

## சூளுரைக்கின்றார் ஹெல உறுமய தலைவர்

(கொழும்பு)

புலிகளின் விமானங்களை அழிக்கமுடியாவிட்டால் எங்களிடம் சொல்லுங்கள். அல்லது ஆட்சிப் பொறுப்பை எங்களிடம் தாருங்கள். நாங்கள் புலிகளின் விமானங்களை ஒரு விநாடியில் கூண்டோடு அழித்துக்காட்டுவோம். ஏன் ஆயுதங்களையே தாருங்கள். நாங்கள் வன்னிக்குச் சென்று புலிகளின் விமானங்களையும், விமான ஓடுபாதைகளையும் துவம்சம்செய்து காட்டுவோமென சூளுரைத்திருக்கின்றார் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் எல்லாவெல மேதானந்த தேரர்.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இவ்வாறு சூளுரைத்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், (12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. அரசியல்துறை அலுவலகம் மீது நேற்றிரவு கிரனைட் குண்டுத் தாக்குதல்

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அரசியல்துறை அலுவலகத்தின் மீது நேற்று இரவு 7.25 மணியளவில் இனந்தெரியாதோரால் கைக்குண்டு ஒன்று வீசப்பட்டுள்ளது.

கைக்குண்டு அரசியல் அலுவலகத்தினுள் விழுந்து வெடித்துள்ளபோதும், சேதமெதுவும் ஏற்படவில்லை என அரசியல் பொறுப்பாளர் அன்புமாறன் தெரிவித்துள்ளார். குண்டுவெடித்த வேளையில் அலுவலகத்தில் குறைந்தது 15 பேராவது இருந்ததாகவும், இருப்பினும் அதிர்ஷ்டவசமாக யாருக்கும் எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசடி சந்திக்கருகே அமைந்துள்ள இந்த அலுவலகத்திற்கு அண்மையில் பொலிஸ் நிலையமொன்று உள்ளது. இதுதவிர, தாமரைக்கேணி வீதியிலிருந்து மகாஜனா கல்லூரிக்கு வரும் பாதையின் ஆரம்பத்தில் பொலிஸ் சோதனைச் சாவடியும் உள்ளது. இவற்றைத் தாண்டி வந்து கைக்குண்டுவீச்சு நடத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நள்ளிரவில் வீட்டுக்குள் புகுந்தது யார்?

(துன்னாலை)

துன்னாலை கலிகைச் சந்தி கரிக்குத்தான் கிராமத்திலுள்ள வீடு ஒன்றினுள் நள்ளிரவில் புகுந்த நபர் தொடர்பாக இராணுவத் தரப்பு நேற்று விடுத்திருந்த செய்திக் குறிப்பு அப்பகுதி மக்களை ஆத்திரமடையச் செய்திருப்பதாக அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நள்ளிரவில் வீடு புகுந்த நபருக்கும், இராணுவத்தினருக்கும் எந்தவிததொடர்பும் இல்லை என்றும், தேவையற்ற வகையில் இராணுவச் சிப்பாய்மீது சந்தேகம்கொள்வது கவலைதருவதாகவும், இராணுவத் தரப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் சம்பவ தினத்தன்று நள்ளிரவு நபரொருவர் மேலாடை இல்லாமல் வீட்டுக்குள் புகுந்தபோது திடுக்குற்றெழுந்த வீட்டு உரிமையாளர் அயலவரின் உதவியுடன் பிரஸ்தாப நபரைத் துரத்திச்சென்றபோது அந்தநபர் அருகிலுள்ள இராணுவ முகாமின் முன்னணிக் காவலரணுக்குள் தஞ்சம் புகுந்துள்ளார். துரத்திச் சென்றவர்கள் அவரை மடக்கிப் பிடித்ததுடன், அவர் இராணுவச் சிப்பாய் என்பதையும் உறுதிப்படுத்திக்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் சம்பவம்பற்றி மேலதிகாரியிடம் முறையிடவேண்டாமென சம்பந்தப்பட்ட சிப்பாயும், காவலரணுக்குள் இருந்த சிப்பாயும் வலியுறுத்தியதாகவும், எனினும் நள்ளிரவாதலால் அங்கிருந்து திரும்பிய உறவினர்கள் மறுநாள் காலை முகாம் பொறுப்பதிகாரியிடம் முறையிட்டதாகவும் தெரிய (12 ஆம் பக்கம் பார்க்க)

## 10 ஆண்டுகள் பதவியிலிருந்து ஜனாதிபதி சாதித்தது என்ன?

### ரணில் விக்கிரமசிங்க கேள்வி

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறையின் பிரகாரம் ஆறு வருடங்களுக்கு ஆட்சிசெய்யும் ஒருவர் நாட்டுப்பற்றுடையவராக இருந்தால் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டுசெல்லமுடியும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற ஐ.தே.கவின் செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த நாட்டின் முதல் இரண்டு நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதிகளான ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும், ஆர்.பிரேமதாசாவும் இதனைச் செயலில் நிரூபித்துக்காட்டினர். அவர்களின் காலப்பகுதியில் இந்த நாட்டின் சகல பிரிவுகளிலும் அபிவிருத்திகள் ஏற்பட்டன.

எனினும் தற்போதைய நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி பதவியேற்று 10 வருடங்கள் கடந்துள்ளபோதிலும் நாட்டில் எந்தவித அபிவிருத்தியும் ஏற்படவில்லை.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

## வயோதிபப் பெண்மீது வல்லுறவு முயற்சி கண்டித்து நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி

(யாழ்ப்பாணம்)

நீர்வேலிப் பகுதியில் கடந்த 10 ஆம் திகதி வயோதிபப் பெண் ஒருவரை சிப்பாய் ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயற்சித்தமையைக் கண்டித்து நேற்று யாழ்ப்பாணத்தில் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

வலி.கிழக்குப் கிராமிய அமைப்புக்களின் ஒன்றியம் மற்றும் நீர்வேலி விவசாய சம்மேளனம் என்பவற்றின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இப்பேரணியானது நல்லூர் முன்றலில் இருந்து ஆரம்பமானது.

இப்பேரணியில் 1000 இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். இதேவேளை இந்தப் பேரணியில் கலந்துகொண்டோர் 'சிங்களச் சிப்பாயே உன் சேட்டை உன்வீட்டுக்குள்', 'அரசே உனது நிழல் யுத்தத்தை நிறுத்து', 'சிங்கள அரசே சமாதானமென்று சொல்லி சமாதிக் கிடங்குகளையே தோண்டுகின்றாய்', 'சிங்கள சிப்பாயே ஓடித் தப்பும் வழியைப் பார்', 'தமிழ்ப் பெண்கள் அக்கினிப் பிளம்புகள் எரிந்து விடுவாய்' போன்ற வாச (12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சியில் நோர்வேயை ஓரங்கட்டுவதற்கு தீவிர முயற்சி

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை முயற்சிகளில் இருந்து நோர்வேத் தரப்பினரை ஓரங்கட்டி வெளியேற்றும் நடவடிக்கைகள் முனைப்புப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜே.வி.பியுடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்த நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அண்மையில் ஜே.வி.பி தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவைச் சந்தித்த கதிர்காமர், மிகவிரைவில நோர்வே அரசாங்கத்தை சமாதான முயற்சிகளிலிருந்து விலக்கி வைப்பதாக உறுதியளித்துள்ளார்.

இத்தகவலை கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் சோமவன்ச அமரசிங்க தெரிவித்ததாக சிங்கள ஊடகமொன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

சொல்பவற்றை நூறுவீதம் சரியாகச் செய்கின்ற கதிர்காமர் கூறிய இக்கூற்று உடனடியாக நடைமுறைக்கு வருமென்று சோமவன்ச அமரசிங்க நம்பிக்கை வெளியிட்டிருந்தார் என்றும், இத (12 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுமரத்தில் கடலுக்குச் சென்றவர்கள் 10 நாட்களாகியும் கரை திரும்பவில்லை

(திருநெல்வேலி)

வடமராட்சி வல்வெட்டித்துறையில் கடல்தொழிலுக்குச் சென்ற தொழிலாளர்கள் இருவர் 10 நாட்களாகியும் இன்னும் வீடு திரும்பவில்லை என வடமராட்சி கடற்தொழிலாளர் சமாசம் அறிவித்துள்ளது. வல்வெட்டித்துறை ஆதி கோவிலடியைச் சேர்ந்தவர்களான ஜோசப் பிரேமதாஸ் (வயது 38), சிவராஜ் பிரபு (வயது 24) ஆகிய இருவருமே காணாமல்போனவர்களாவர்.

கடந்த 3 ஆம் திகதி கடலுக்கு கட்டுமரத்தில் சென்றவர்கள் இன்னமும் வீடு திரும்பவில்லை எனவும், காணாமல்போனவர்களைத் தேடும் முயற்சி தொடர்ந்து இடம்பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த-43)

EXPOAIR
Your friend in the skies...
யாழ்

கொழும்பு
தினசரி விமான சேவை
எக்ஸ்போ எயார்
யாழ்ப்பாணத்தில் T.P: 021 222 3891/ 6297, 0772 348888, 0772 349999
E.mail: jaffna@expoavi.com, resaervations@expoavi.com
வானத்தில் உங்கள் நண்பன்....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இயற்கை அனர்த்தங்களிலிருந்து தற்காத்துக் கொள்வது எப்படி?

## பொது மக்களுக்கு செஞ்சிலுவைச் சங்கம் பயிற்சி

(கொழும்பு)

இயற்கை அனர்த்தங்களின் போது தற்காத்துக் கொள்வது தொடர்பாக விசேட பயிற்சிகளை பொதுமக்களுக்கு வழங்கும் செயற்றிட்டம் ஒன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் அமுல் செய்யப்படவுள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இந்தத் திட்டத்திற்கு சுவிற்சர்லாந்து செஞ்சிலுவைச் சங்கம் நிதியுதவிகளை வழங்குவதாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் வசந்தராஜா தெரிவித்துள்ளார்.

நீண்டகால அடிப்படையில் அமுல்செய்யப்படவுள்ள இந்தத் திட்டத்தில் ஆயிரம் தொண்டர்கள் பணியாற்றவுள்ளனர்.

பயிற்சிகளை வழங்கும் பயிற்றுவிப்பாளர்கள் 40 பேருக்கு முதற்கட்டமாக பயிற்சிகள் வழங்கப்பட இருக்கின்றது.

பயிற்சி பெறும் தொண்டர்கள் குறைந்தது இரண்டு வருடங்கள் மக்களுடன் இணைந்திருந்து மக்களுக்கு தன்னம்பிக்கை, தற்பாதுகாப்பை வளர்க்கும் நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர். (ந-9)

## துறைமுகத்தில் பொறுப்பேற்கப்படாமலுள்ள

# 'சுனாமி' நிவாரணப் பொருட்களை விற்பனை செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

உரிய தினத்திற்குள் பொறுப்பேற்கப்படாது துறைமுகத்தில் குவிந்துள்ள சுனாமி நிவாரணப் பொருட்களை சமூக சேவை திணைக்களத்தில் ஒப்படைப்பதற்கு துறைமுக அதிகாரசபை தீர்மானித்துள்ளது.

கட்டணங்கள் அறவிடாமல் இந்த நிவாரணப் பொருட்களை சமூகசேவைத் திணைக்களத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்திருப்பதாக துறைமுக அதிகாரசபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வந்தடைந்துள்ள நிவாரணப் பொருட்கள் பெருமளவு துறைமுகத்தில் தேங்கி இருக்கின்றன.

இந்தப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கு சம்பந்தப்பட்ட பிரதிநிதிகள் எவரும் இதுவரை முன்வரவில்லை என்று துறைமுக அதிகாரசபை தெரிவித்துள்ளது.

உடனடி பாவனைக்குரிய உணவு வகைகள் குடிநீர் மற்றும் பால்மா என்பன இதில் இருப்பதாக துறைமுக அதிகாரசபை தெரிவித்துள்ளது.

துறைமுக விதிகளின் படி கப்பலில் இருந்து பொருட்கள் வந்து சேர்ந்த 21 தினங்களுக்குள் அவை துறைமுகத்திலிருந்து பொறுப்பேற்கப்படாவிட்டால், அந்தப் பொருட்கள் கேள்விப்பத்திர மூலம் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதிகாரசபை தெரிவித்துள்ளது. (ந-9)

## சுனாமியால் பாதிப்படைந்தோருக்கு மணற்காட்டில் 200 வீட்டுத் திட்டம்

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப் பகுதியில் சுனாமி அனர்த்தத்தால் பாதிப்படைந்த மக்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

ஒவ்வொன்றும் சுமார் 4.5 இலட்சம் பெறுமதியில் 200 நிரந்தர வீடுகளை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு வைபவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

இவ் வீடமைப்புத் திட்டத்திற்கான அடிக்கல்லை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் மற்றும் யாழ்.ஆயர் வண.தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை ஆகியோர் நாட்டி வைத்தனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய யாழ்.ஆயர் வண.தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரின் ஆலோசனைகளுக்கு அமைவான, சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு திருச்சபை ஊடாக வடமராட்சி மற்றும் முல்லைத்தீவுப் பகுதிகளில் 2000 வீடுகள் அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிம்மதியும் இறையாசியும் கிடைக்க ஆண்டவரைப் பிரார்த்திக்கிறேன் என்றார்.

இவ் அடிக்கல் நாட்டு நிகழ்வில், தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் வடமராட்சி கிழக்குப் பொறுப்பாளர் தீபன், வடமராட்சி சுனாமி அனர்த்த நிவாரண நடவடிக்கை நிலையத் தலைவர் பாலையா ஆகியோர் உட்பட மற்றும் பலரும் கலந்து கொண்டனர். (ந-43)

## சுனாமியால் பெற்றோரை இழந்த சிறார்களை பாதுகாவலரிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தின் போது பெற்றோர்களை இழந்த சிறுவர்களை மாகாண ஆணையாளர்களினால் அமுல்படுத்தப்பட்ட சட்டத்தின் கீழ் பாதுகாவலரிடம் ஒப்படைக்கவுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைத் தலைவர் ஹரிந்திரசில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாதுகாவலரிடம ஒப்படைக்கப்படவுள்ள சிறுவர்கள் தொடர்பான விபரப்பட்டியல் இதுவரை தமக்குக் கிடைக்கவில்லை என்றும், விபரம் கிடைத்தவுடன் நீதியமைச்சின் கீழ் கொண்டு வரப்படவுள்ள புதிய பாதுகாவலர் சட்டத்திற்கு அமைவாக முற்றிலும் தகுதியுடையவர்களிடம் சிறுவர்கள் ஒப்படைக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

பல்வேறு தொழில்துறைகளைச் சார்ந்தவர்களைக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட குழுவின ஊடாக தகுதியுடைய பாதுகாவலர்களைத் தெரிவு செய்ய இப் புதிய சட்டம் வழிவகுத்துள்ளது.

பெற்றோரை இழந்து பல்வேறு தரப்பினரின் பாதுகாப்பில் உள்ள சிறுவர்கள் தொடர்பாக புதிய சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் புதிய ஆய்வொன்றை மேற்கொள்ளத் தீர்மானித்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-8)

# இராசி பலன்

**15.03.2005**

**பங்குனி 2, செவ்வாய்க்கிழமை**
**பஞ்சமி பிற்பகல் 12.32 மணிவரை**
**கார்த்திகை பின்னிரவு 05.45 மணிவரை**
**இராகுகாலம் 3.20 - 4.50 மணிவரை**
**சுபநேரம் 10.50 - 12.20 மணிவரை**
**சித்தாமிர்தம், கார்த்திகை விரதம்.**

| | |
|---|---|
| மேடம் | கடினவார்த்தை, பணவிரயம், காரிய தடங்கல், போசனசுகக்குறைவு. |
| இடபம் | புதிய தகவல், வெகுமானம், மாதர் நட்பு, விருந்துபசாரம். |
| மிதுனம் | சோம்பல் நிலை, பிறருக்கு உதவி செய்தல், இடமாற்றம், பணவிரயம். |
| கடகம் | தனதானியச் சேர்க்கை, நண்பர்கள் உதவி, குடும்ப மகிழ்ச்சி, முயற்சி கைகூடும். |
| சிங்கம் | எடுத்தகாரியம் கைகூடும், நல்லசெய்தி, மனமகிழ்ச்சி, பிரபுத்தனம். |
| கன்னி | கட்டுப்பாடு, தேசாந்திரவாசம், எதிர்பாராத செலவு, குடும்பக்கவலை. |
| துலாம் | பொருள் விரயம், முழங்கால் வலி, காரிய தடங்கல், பிரயாண பயம். |
| விருச்சிகம் | நல்ல செய்தி, களஸ்திர நன்மை, காரிய அனுகூலம், செல்வாக்கு. |
| தனுசு | தேகநலன், பிரயாண நன்மை, முயற்சி கைகூடும், பொருள் சேர்க்கை. |
| மகரம் | புத்திரரால் கவலை, முயற்சி தாமதம், பணக்குறைவு, ஆரோக்கியக் குறைவு. |
| கும்பம் | தனவிரயம், தன்னம்பிக்கை குறைவு, ரோக நிலை, வேலைச்சுமை. |
| மீனம் | உறவினர் வழி உதவி, புதிய முயற்சி, பெருமையடைதல், போசன நன்மை. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது

—வளவன்

## கதிர்காமர் லண்டன் பயணம்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் லண்டனுக்கு விஜயம் செய்துள்ளார்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு லண்டன் அரசாங்கம் வழங்கிய உடனடி உதவிகளுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாகவே கதிர்காமா லண்டனுக்கு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கதிர்காமரின் இந்த விஜயத்தின்போது அநநாட்டு வெளிவிவகார அமைச்சர் ஜக் ஸ்ரோவையும அபிவிருத்தித்துறை அமைச்சர் ஹிலரி பென்னையும் சந்தித்துப் பேசுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அனர்த்த முகாமைத்துவ செயலணியின் செயற்பாடுகள் குறித்து லண்டனில் உள்ள அமைச்சர்களுடன் கதிர்காமர் கலந்துரையாடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## சுங்கப் பணிகளை கடற்படையிடம் ஒப்படைப்பதற்கு கடும் எதிர்ப்பு

இலங்கை சுங்கத்திணைக்களத்தின் பணிகளை கடற்படையினரிடம் ஒப்படைக்கும் நடவடிக்கைக்கு சுங்க தொழிலாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

சுங்கத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டு வந்த பரிசோதனை நடவடிக்கைகளை அரசாங்கம் கடற்படையினரிடம் ஒப்படைத்துள்ளது.

இதற்கு தமது எதிர்ப்பினைத் தெரிவித்துள்ள சுங்கத் திணைக்கள ஊழியர்களின் தொழிற்சங்கம் சட்டப்படி வேலைசெய்யும் தொழிற்சங்கப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர். யுத்த காலத்தின்போது கூட தாங்கள் இந்த சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்ததாகவும், தற்போது நாட்டில் அவ்வாறான போர்ச்சூழல் கூட ஏற்படாத நிலையில் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையினைக் கண்டிப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (க)

**பெண்கள் உரிமை தொடர்பான பெண்களுக்கெதிரான பேதங்காட்டலின் அனைத்து வடிவங்களையும் ஒழித்தல்சார் இணக்க உடன்படிக்கை**

**உறுப்புரை 11.(2)**

**ஆ) முன்னைய தொழில், சிரேஷ்ட நிலை அல்லது சமூகச் சலுகைகள் என்பவற்றின் இழப்பின்றி வேதனத்துடன் ஒப்பிடத்தக்க சமூகநலன் [illegible]களுடன் பிரசவ லீவை அறிமுகப்படுத்தல்.**

**மிகுதி நாளை.**



**உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலையின் வினோத விளையாட்டு விழா நிகழ்வினைப் பழைய மாணவர் அருட்திரு இ.ஸ்ரலின் அடிகளார் ஆரம்பித்து வைக்கிறார்.**

**அங்கே பாடசாலை அதிபர் மு.விக்னேஸ்வரன், விளையாட்டுக் குழுச் செயலாளர் வே.இரத்தினபாலன் ஆகியோர் காணப்படுகின்றனர்.**

**(படம்: கோப்பாய் நிருபர்)**



**யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர் சுனாமி நிவாரணக் கல்விச் செயற்றிட்டத்தை கடந்த திங்கட்கிழமை ஆழியவளை சி.சி.த.க. பாடசாலையில் மேற்கொண்ட போது எடுக்கப்பட்ட படம்.**

# "மக்கள் புரட்சி வெடிக்கட்டும்" என்ற தியாகி திலீபனின் கூற்று

# தேசிய எழுச்சிப் பேரவையினூடாக நிதர்சனமாகியுள்ளது

## தீவக அரசியல்துறைப் பொறுப்பாளர் இசைச்செல்வன் உரை

எமது தேசியத் தலைவரின் தீர்க்க தரிசனத்தால் உருவாக் கப்பட்டதே தேசிய எழுச்சிப பேரவை இவ் தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடாக அன்று எமது தியாக தீபம் திலீபன் கூறிய மக்கள் புரட்சி வெடிக் கட்டும் சுதந்திர தமிழீழம் மல ரும் என்ற வார்த்தை இன்று நிதர்சனமாக்கப்பட்டு கொண் டிருக்கின்றது இதன் மூலம் விடுதலையினை விரைப்படுத் தும் அதேவேளை அதனூடாக எமது பிரதேச அபிவிருத்தியி னையும் மேற்கொள்ள முடியும் என தீவக கோட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் வீ.இசைச் செல்வன் தெரிவித்தார்.

வேலணை பெருங்குளம் முத்துமாரியம்மன் ஆலய மண் டபத்தில் நடைபெற்ற தீவக வேலைத்திட்டங்கள் சம்பநத மான கலந்துரையாடலில் கலநது கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

போாநிறுதத ஒப்பந்தம எழு தப்பட்டு 3வருடங் களாகியும் எமது மக்களுக்கு எதாவது உரி மைகள் கிடைக்கப்பட்டதா? அவர்கள் விடுகின்ற கண்ணீ ருக்கு முடிவுகட்டப்பட்டதா? என பார்ப்போமாக இருந்தால் ஏதுமே நடந்ததாக இல்லை.

பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில மக்கள் வாழ்வி டங்களில் ஸ்ரீலங்கா இராணு வம் குடிகொண்டுள்ளது. இத னால் மக்கள் தங்களுடைய சொந்த பிரதேசங்களுக்கு செல்ல முடியாத நிலைமை காணப் படுகின்றது.

18000க்கு மேற்பட்ட மாவீரா களின் தியாகத்தினால் இன்று தமிழர்களாகிய நாம் தலை நிமிர்ந்து வாழ்கின்றோம். இவர் களுடைய தியாகத்தினால் சர்வ தேசம் எமது விடுதலையின உண்மை நிலையினையுணர்ந்து நிற்கின்றது. இன்று சர்வதேசம் எமது விடுதலைக்கு கரம்நீட்டி நிற்கின்றது. தென்னிலங்கை அரசாங்கமோ என்னசெய்வது என்று தெரியாது தடுமாறி நிற் கின்றது. இந்நிலையில் எமது மக்கள் எழுச்சிகொண்டு செயற் படுவதன்மூலம் எமது விடுத லையை விரைவுபடுத்த முடி யும்.

இதில் யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் ஆலோ சகரும், யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளருமான இளம் பிறை கருத்துத் தெரிவிக்கை யில்,

30வருடங்களாக பேராட்டம் நடைபெற்று வருகின்றது. ஆனால் இப் போராட்டம் நடைபெற்ற காலங்களில் எமக்கு சர்வதேசம் அங்கீகாரம் கிடைக்கவில்லை ஆனால் இன்று எமக்கு சர்வ தேச அங்கீகாரம் இருக்கின் றது. உலக வங்கிகூட எமக்கு அந்தஸ்து வழங்கியிருக்கின் றது. சுக இன்பங்கள், சுய நலன களை துச்சமென மதித்து தியா கம் செய்த மாவீரர்களுடைய தியாகத்தினாலேயே இன்று உலக தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழ்ந்துகொண்டு இருக்கின் றார்கள்.

இன்று சர்வதேசம விடுத லைப் போரினுடைய உண்மை களை அறிநது சர்வதேச நாட்டு பிரதிநிதிகள் எமது பகுதிக ளுக்கு வந்து குவிந்துகொண்டு இருக்கின்றார்கள். ஆனால் எமது உரிமைகளை எமக்கு வழங் குவதற்கு தென்னிலங்கை அர சியல்வாதிகளோ விட்டுக்கொடுப் பதற்கு தயாராக இல்லை.

அண்மையில் இயற்கை அன் னையின் சீற்றத்தால் 25000க்கு மேற்பட்ட எமது தமிழ் மக்கள் கொன்றொழிக்கபபட்டனர். இவ் வாறான சம்பவங்களில்கூட எமது தமிழ் பிரதேசம் அரசாங்கத்தால புறக்கணிக்கப்பட்டு எந்தவித மான புனரமைப்பு பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இயற்கை அழிவின் பின்ன ராவது தென்னிலங்கை அரசியல் வாதிகள் விட்டுக்கொடுப்புடன் செயற்படுவார்கள் என சர்வதேசம அவதானித்துக்கொண்டு இருந் தது. ஆனால் அதற்குப் புறம் பான நிலையினை சர்வதேசம் உணர்ந்து இருக்கின்றது.

சுதந்திரக கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து இருக்கின்ற ஜே.வி. பியோ எமக்கு உரிமைகள் வழங்கக் கூடாதுஎன போராட் டங்கள் நடாத்தி வருகின்றது.

ஆனால் சர்வதேச அழுத்தம் மூலம் எங்களுடைய பிரச் சினைகளை தீர்க்க முடியும் இந்த நிலையில எமது தேசிய தலைவருடைய கரங்களை பலப் படுத்தவேண்டும் அதேவேளை சர்வதேசத்தின் கரங்களையும் பற்றவேண்டும்.

சர்வதேசம் எங்களுக்கு கரங் களை நீட்டுகின்றது. அதற்கு நாம் அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும் எமது விடு தலை உணர்வினை சர்வதேசத் துக்கு வெளிப்படுத்த வேண்டும் எமது அபிலாசைகள், உரிமைகள், உணர்வுகளை தேசிய எழுசசி பேரவையுடன் இணைந்து வெளிப் படுத்த வேண்டும் என்றார்.

இந்நிகழ்வானது கடந்த 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00மணியளவில் வேலணை பெருங்குளம் முத்துமாரியம்மன் ஆலய மண்டபத்தில் வேலணை அரசயல்துறைப் பொறுப்பாளர் யாழ்.நம்பி தலைமையில் நடை பெற்றது.

இதில கருத்துக்களை ஊர் காவற்றுறை பிரதேச செயலர் ஊர்காவற்றுறை கோட்டக்க கல்விப் பணிப்பாளர் ச.பாஸ் கரன் ஆகியோர் நிகழ்ந்தினர்.

தொடர்ந்து தீவக கோடட தேசிய எழுச்சிப்பேரவைக்கான நிர்வாகக்குழு சப்த தீவுகளி லும் தெரிவுசெய்யப்பட்டது.

இதில் செயலாளராக எஸ்.சத் தியதாசனும் துணை செயலா ளாராக சு.பன்னீர் செல்வமும் பொருளாளராக க.கார்த்திகேசும் தொழில்சார் பிரதிநிதியாக:- எஸ்.சங்கரப்பிள்ளையும் இளை ஞர் அணி பிரதிநிதிகளாக எஸ்பிருந் தாவும் (பெண்) இ.ரங்கநாத னும், கல்விசார் பிரதிநிதியாக ச.பாஸ்கரனும் பொது அமைப்பு பிரதிநிதியாக சு.கருணாகரனும் கூட்டுறவு பிரதிநிதியாக க.நவ ரெட்ணமும் கொள்கை முன்னெ டுப்புப் பிரதிநிதியாக பொ.அருண கிரியும் பெண்கள் அமைப்பு பிரதி நிதியாக ச.இந்திராணியும் ஆலோ சகர்களாக ஊர்காவற்றுறை பிர தேச செயலரும் வேலணை பிர தேச செயலரும் நெடுந்தீவு பிர தேசசெயலரும், தீவக வலய கல் விப்பணிப்பாளரும், கத்தோலிக்க மதகுருகளும, முஸ்லிம் பிரதிநிதி களும், இந்து மதகுருக்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (ப-126)

## தனியார்துறை ஊழியர்களும் சம்பள உயர்வைப் பெறுவர்?

(கொழும்பு)

தனியார்துறை ஊழியர்களும் சம்பள உயர்வைப் பெறும் வகையில் சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக தொழி லமைச்சர் அதாவுட செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இதற்காக அமைச்சரவை யில் விசேட அங்கீகாரம் பெறப் பட்டுள்ளதாக அவர் தெரிவித் தார். இதனடிப்படையில் தனி யார்துறை ஊழியர்களுக்கு ஆயி ரம்ரூபா வேதன உயர்வு வழங் கப்படும என்று அரசாங்கம் தெரி வித்துள்ளது.

சமபள உயர்வுக்குறித்த பிரே ரணைக்கு அமைச்சரவை அங் ககாரம் வழங்கியதினால் அவற்றை விரைவில் பாராளுமன்றத்தில சமர்ப்பித்து பின்னர் நடை முறைப்படுத்தப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.(க-4)

## மொகாலி கிரிக்கெற் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவு

கடந்த சனியன்று முடிவ டைந்த இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முத லாவது கிரிக்கெற் டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்திருக்கிறது.

மொகாலியில் நடைபெற்ற இப் போட்டியில் பாகிஸ்தான் அணி தனது முதல் இன்னிங்



ஸில் 312 ஓட்டங்களைப் பெற் றது. இந்திய அணி தனது முதல் இனனிங்ஸில் 516ஓட்டங்களை எடுத்தது.

வீரேந்தர் ஷெவாக் 173 ஓட் டங்களையும் டெண்டுல்கர் 94 ஓட்டங்களையும் எடுத்தனர். கனேரியா 6 விக்கெற்றுக்களை வீழ்த்தினார்.

பாகிஸ்தான் தனது இரண் டாவது இன்னிங்ஸை நிதான மாக ஆடி ஓட்டங்களைக் குவித் ததால இந்திய அணியின் வெற் றிவாய்ப்பு கைநழுவிப்போனது. நானகாம்நாள் ஆட்ட நேர முடி வில் 6 விக்கெற்றுக்களை இழந்து 257 ஓட்டங்களை எடுத திருந்த பாகிஸ்தான் அணி, ஐந் தாம் நாள் ஆட்டம் தொடர்நத



போது ஏழாவது விககெற் ஜோடி யாக இணைந்து ஆடிய கம்ரன் அக்மலும் அப்துல் ராஷாக்கும் மிக நிதானமாக ஆடி ஓட்டங் களைக் குவித்தனர்.

இருவரும் ஏழாவது விக்கெற் றுக்காக 186 ஓட்டங்களை



இணைபபாட்டமாக எடுத்து புதிய சாதனை படைத்தனர். ரஷாக் 71 ஓட்டங்களையும் கம ரன்அக்மல் 109 ஓட்டங்களை யும் எடுத்தனர் பாகிஸ்தான் அணி தனது இரண்டாவது இன் னிங்ஸல் 9 விக்கெற்றுக்களை இழந்து 496ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டத்தை இடை நிறுத்திக்கொண்டது.

இந்திய அணி சார்பில் பாலாஜி கும்ளே ஆகியோர் தலா 4 விக் கெற்றுக்களை எடுத்தனர்.

25 ஓவர்களில் 293ஓடடங் களை வெற்றிபெற எடுக்க வேண் டிய நிலையில், தனது இரண் டாவது இன்னிங்சை ஆடிய இந்திய அணி, 17 ஓவரில் 2 விக்கெற்றுக்களை இழந்து 85 ஓட்டஙகளை எடுத்திருந்த போது மேலும் 8 ஓவர்களில் வெற்றி இலக்கை எட்ட முடியாது என் பதால் இரு அணித்தலைவர் களும் ஆட்டத்தை நிறைவு செய்ய முடிவு எடுத்தனர். இத னால் ஆட்டம் வெற்றிதோல்



### விளையாட்டுச் செய்திகள்

வியின்றி முடிவடைந்தது. இப் போட்டியின் ஆட்டநாயகனாக 15 பவுண்டரிகளுடன் தனது முதல் சதத்தைப்பெற்ற விக் கெற் காப்பாளரான கம்ரன் அக் மல் தெரிவுசெய்யப்பட்டார். (து-7)

## முதலாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி அபாரவெற்றி

அவுஸ்திரேலியா-நியூஸிலாந்து அணிகளுக்கிடையே கிறைஸ் சேர்ச்சில் நடந்துமுடிந்த முத லாவது கிரிக்கெற் டெஸ்ட்



போட்டியில் அவுஸ்திரேலிய அணி 9 விக்கெற்றுக்களால் வெற்றி பெற்றது.

கிறைஸ்சேர்ச்சில் கடந்த சனியன்று நான்காம் நாளே முடிவடைந்த இப் போட்டியில் நியூஸிலாந்து தனது முதல் இன்னிங்ஸல் 433 ஓட்டங்களை எடுத்திருந்தது. அவுஸ்திரே லியா தனது முதல் இன்னிங் ஸில் 432 ஓட்டங்களை எடுத் திருந்தது.

கேடிச் 118 ஓட்டங்களை யும் கில்கிறிஸ்ட் 121 ஓட்டங் களையும் ரிக்கிபொன்டிங் 46 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் வெற்றோரி 5 விக்கெற்றுக்களையும் பிராங் களின் 2 விக்கெற்றுக்களை யும் மாட்டீன், பிரைன், அஸ்லே ஆகியோர் தலா ஒரு விக்கெற் றையும் வீழ்த்தினர்.

நியு,ஸிலாந்து தனது இரண டாவது இன்னிங்ஸில் 131ஓட் டங்களை மாத்திரம் பெற்று சகல விக்கெற்றுக்களையும் இழந்தது. பிளெமிங்-17,மார் ஷல்-22, நாதன் அஸ்லே-21, மக்கொலம்-24, வெற்றோரி-23 ஓட்டங்களை எடுத்தனர். நியூ ஸிலாந்து அணியில் 7 விக் கெற்றுக்கள் எல்.பி.டபிள்யு முறையில் வீழ்த்தப்பட்டமை துரதிஷ்டமானதாகும்.

பந்து வீச்சில் ஷேர்ன்வோன- 5 விக்கெற்றுக்களையும், கில் லெஸ்பி-3 விக்கெற்றுக்களை யும் மக்ராத், காஸ்பரோவிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெற் றையும் வீழ்த்தினர்.

வெற்றிபெற 133 ஓட்டங் களை மாத்திரமே எடுக்க வேண் டிய நிலையில் தனது இரண் டாவது இன்னிங்சை ஆடிய அவுஸ்திரேலிய அணி ஒரு விக் கெற்றை மாத்திரம் இழந்து 135 ஓட்டங்களைப்பெற்று 9



விக்கெற்றுக்களால் வெற்றி பெற்றது.

லாங்கர் ஆட்டமிழக்காது 72 ஓட்டங்களையும் பொன்டிங் ஆட்டமிழக்காது 47ஓட்டங்க ளையும் எடுத்திருந்தனர். 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட இத தொடரில் அவுஸ்திரேலிய அணி 1:0 என்ற அடிப்படையில் முன்னிலையில் உள்ளது. (து-7)

### தமிழ்ப்பெண்கள் மீதான வன்முறையைக் கண்டிக்கின்றோம்

# கிராம அமைப்புக்களின் ஒன்றியம், விவசாய சம்மேளனம் க.கா. குழு, ம.உ. ஆணைக்குழுக்களுக்கு மகஜர்!

(யாழ்ப்பாணம்)

நீர்வேலியில் கடந்த 10 ஆம் திகதி வயோதிபப் பெண் ஒருவரை இராணுவச் சிப்பாய் ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயற்சித்ததைக் கண்டித்தும், அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் இராணுவ அத்துமீறலைக் கண்டித்தும், நேற்று நடைபெற்ற கண்டனப் பேரணியின்போது யாழ்.மாவட டத்தில் உள்ள பொது அமைப்புக்கள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடமும், மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமும் மகஜர்களைக் கையளித்தன.

வலி.கிழக்கு கிராம அமைப்புக்களின் ஒன்றியம் கையளித்த மகஜரில்,

கடந்த 10ஆம் திகதி அன்று இடம்பெற்ற வயோதிபப் பெண் மீதான சிப்பாயின் பாலியல் வன்முறை படைத்தரப்பினர் மத்தியில் ஊடுபரவியிருக்கும் பாலியல் வக்கிர உணர்வின் வெளிப்பாடாகும்.

எப்போதுமே ஆக்கிரமிப்பாளன் ஒடுக்கப்படுபவர் மீதான அரசியல் சமூக பொருண்மியத் தளங்களில் மறைமுகமாகவும் வெட்கங்கெட்ட வகையில் நேரடியாகவும் ஆக்கிரமிப்பைப் பிரயோகிப்பான்.

இவ்வகையிலேயே பேரினவாத அரசும் தமிழ் மக்கள்மீது ஆக்கிரமிப்பைத் திணிக்கிறது. ஆக்கிரமிப்பின் ஒரு வடிவமாகவே தமிழ்ப்பெண்கள் மீதான வன்முறையைக் கருதுகிறோம்.

மூன்று வருடங்களாகப் போர்நிறுத்த உடன்படிக்கை அமுலிலிருந்தும் நிரந்தர சமாதானத்திற்கான முனைப்புகளை அரசாங்கம அரித்துக்கொண்டு வருவது தெளிவாகத் தெரிகிறது.

கடந்த சில நாட்களாகப் படைத்தரப்பு மேற்கொள்ளும் தமிழ் மக்களைச் சீண்டும் வகையிலான செயற்பாடுகள் போர்நிறுத்த உடன்படிக்கையைப் புதைத்துவிடும் இலக்கை நோக்கிய தந்திரோபாய நடவடிக்கைகளா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் தோன்றியுள்ளது.

எனவேதான் படைத்தரப்பினரை அவர்கள் தற்போது நிலைகொண்டுள்ள காவலரண்கள், முகாம்கள் ஆகியவற்றிலிருந்து வெளியேறுமாறு கோருகிறோம். இவையே படைகளின் தமிழ்மக்கள் விரோத செயற்பாடுகளுக்குத் தளமாக விளங்குகின்றன.

எம்மால் சமர்ப்பிக்கப்படும இம்மகஜர் மேற்கூறப்பட்ட காரணங்களுக்காகவே தங்களிடம் சமர்ப்பிக்கப்படுகிறது.

நிரந்தர சமாதானத்திற்கான நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான வழிமுறைகளில் ஒன்றாகத தமிழ்மக்களது வாழ்நிலை சகஜநிலைக்குத் திரும்புதல என்பது உள்ளது. இதுவே தங்களது இலக்குமாகும், எமது இலக்குமாகும். ஆனால் பேரினவாத அரசாங்கமோ கபடததனமான வகையில், இடையூறு விளைவிக்கும் வகையில் வஞ்சக நாடகமாடுகிறது, ஆனால் இது வெற்றி பெறபபோவதில்லை.

சர்வதேச சமூகத்தை முக்கியமாகப் போர்நிறுத்த உடன்படிக்கை நடைமுறைபபடுத்தலைக கண்காணிக்கும் தங்களை நாம் கேட்பது இதுதான்:-

"மக்கள் மத்தியில் நிலைகொண்டுள்ள சிறீலங்காப் படைகளை அகற்றி இங்கு நிரந்தர சமாதானம் ஏறபட ஒத்துழைப்பைத் தாருங்கள்''

எமது இந்தக் கோரிக்கை மனித உரிமைகள் பாறபட்டதாகவும, மானுடத்தின அபிலாசையாகவுமுள்ளது என்பதைத் தெரிவித்து இம்மகஜரைத தங்களுககு கையளிக்கிறோம் என்றுள்ளது.

இதேவேளை நீர்வேலி விவசாய சம்மேளனம் கையளித்த மகஜரில்,

ஈழத்தமிழ மக்களாகிய நாம காலங்காலமாக சிங்கள இராணுவத்தால் அடக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும் வந்திருக்கிறோம்.

பெண்கள் மீதான வன்முறைகளில் ஈடுபடும் இராணுவம் அவர்கள் மீது பாலியல் பலாத்காரம் போன்ற அருவருக்கத்தக்க செயல்களிலும் ஈடுபடப் பினனிற்பதில்லை.

இதன் தொடர்ச்சியாகவே சென்ற 10.03.05 வியாழக்கிழமை நிர்வேலிப் பகுதியில் தனிமையில் வாழ்ந்து வந்த வயோதிப மாது மீது இராணுவச் சிப்பாய் ஒருவர் பாலியல் பலாத்கார முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்.

இந்நடவடிக்கையை யாழ் வாழ மக்களாகிய நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். மனித உரிமைகள் பேணும் ஆணைக் குழுவே! மனிதனுக்கு, குறிப்பாக பெண்களுக்குப் பாதுகாப்பு என்பது இல்லையா? குடிமனைகளில் கூலிக்காக மாரடிக்கும் சிங்களப் படையை உடனடியாக வெளியேற்றத் தாங்கள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். தமிழ்ப்பெண்கள் தன்மானம் பெரிதென்று எண்ணுபவர்கள்.

அன்று வயோதிப மாதுக்கு நடந்த கதி இன்று எமது இல்லப பெண்களுக்கும் நடைபெறலாம. சிங்கள இராணுவம் தமிழர் உணர்வுகளைச் சீண்டிவிட்டு வேடிக்கை பார்க்க எண்ணுகிறது.

ஆனால், எந்தத் தீய நடவடிக்கைகளையும் பார்த்துக் கொண்டு இனியும் நாம் வாழா வெட்டிகளாக வாழமுடியாது.

"பெண்கள் நாட்டின் கண்கள் அல்லவா? கண்களைக் கெடுக்கும் எந்த நடவடிக்கைகளையும் நாம் இனி அனுமதிக்கப் போவதில்லை.

எனவே பெண்களின் சுதந்திரத்திற்குத் தடைபோடும் தடைகற்களை அதாவது தமிழர் தாயகக் குடியிருப்புக்களில் வாழும் இராணுவத்தையும், காவலரண்களையும் வெளியேற்ற தாங்கள் விரைந்து உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஒவ்வொரு இரவும், பகலும பதியோடு வாழும் வாழ்வினி எமக்கு வேண்டாம்.

சுதந்திரமாக எல்லோரும் வாழும் சுமுக வாழ்க்கைதான் எமக்குவேண்டும். ஆகவே இதனைக் கருத்திற்கொண்டு தாங்கள் நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றோம் என்றுள்ளது.

(க-19,43)

## நிவாரணப் பணி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு ராமகிருஷ்ண மிசனின் ஏற்பாட்டில் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப்பணி நிகழ்வு எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00மணிக்கு வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனும், சிறப்பு விருநதினராக யாழ். தாய் சேய் வைத்திய நலன் மருத்துவ அதிகாரி ஆர்.சொலமன் அவர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். (க.19)

## விபத்து

சாவகச்சேரி நகரிலுள்ள டச்சு வீதிச் சந்தியில் கடந்த வியாழன் துவிச்சக்கரவணடி - மோட்டார் சைக்கிள் விபத்துச சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இதில் சந்தையில் பொருட்களை வாங்கியவரது பொருட்களும், துவிச்சக்கரவண்டியும் சேதத்துககுள்ளாகியது.

அண்மைக்காலமாக சாவகச்சேரி நகரை அண்மித்த பகுதிகளில் விபத்துக்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப-21)

### திருகோணமலையில்

# நிவாரண பகிர்வை வலியுறுத்தி பிக்குகள் குழு சத்தியாக்கிரகம்

(கொழும்பு)

சுனாமி கடற்பேரலைகளின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டுளள மக்களுக்கு உலக நாடுகளாலும், ஏனைய நிறுவனங்களினாலும் வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்கள அனைத்தும் சுனாமியினால் பாதிக்கபபட்ட சகல சமூகங்களைச் சேர்ந்த மக்களுக்குச் சரியான முறையில் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும என்றும், பாதிக்கபட்ட மக்களுக்கு வீடுகளை அமைப்பதற்கான நிவாரண உதவிகள் அனைததும் நேரடியாகவே வழங்கப்பட வேண்டும். வீடுகளை அமைப்பதில் நிறுவனங்களுக்கோ அல்லது இடைத்தரகர்களுக்கோ இடமளிக்கக்கூடாது எனக் கோரி மகாஜிவ தேவ விகாராதிபதி நந்தரத்ன தேரர் தனது சீடர்களான 5 இளம் பிக்குகளுடன் திருகோணமலை மணிக்கூட்டுக்கோபுரத்தை அண்டிய பகுதியில் சத்தியாக்கிரகப் போராட்டத்தை மேற்கொண்டுள்ளார்.

தனது கோரிக்கைகளுக்கான உரிய தீர்வு வழங்கப்படும வரை தானும் ஏனைய பிக்குமார்களும இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டங்களைத் தொடர்ந்து நடாத்தப்போவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக நந்தரத்ன தேரர் கருத்துத்தெரிவிக்கையில்,

சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கான நிவாரணப்பொருட்கள் பெருமளவில் நாட்டுக்கு வந்தடைந்தபோதும் இந்தப் பொருடகள் பெரும்பாலானவை களஞ்சியங்களிலேயே தேங்கிக்கிடக்கின்றன.



இவ்வாறு தேங்கிக்கிடக்கும் நிவாரணப் பொருட்கள் பழுதாகியும், பாவனைக்கு உதவாமலும் போகலாம். எனவே அரசும், அசர அதிகாரிகளும இவற்றை உடனடியாகப் பாதிக்கபட்ட மக்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிரந்தர வீடுகளை அமைப்பதற்கான பொருந்தொகைப் பணத்தைச் செலவுசெய்யப் போவதாக அரசு அறிவித்துள்ளது.

இந்தப் பணமும், உதவிகளும நேரடியாகவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். இதன்மூலம் அவர்கள் தங்கள் வசதிக்கேற்ப வீடுகளை அமைத்துக்கொள்ளமுடியும்.

இதேவேளை இந்த நாட்டில் நிரந்தர சமாதானம உருவாகவேண்டும். மூன்று வருடகாலமாக அமைதி நிலவிவருக்கின்றது. இது தொடர்ந்தால் மீண்டும் ஒரு யுத்தம் உருவாகலாம். அது பேரழிவுக்கே வழிவகுக்கும என அவர் மேலும் தெரிவித்தார். (ப-4)

## வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

(கொழும்பு)

சுதேச வைத்தியத்துறை அமைச்சின் கீழும் மாகாண சபையின் கீழும் செயற்படும், ஆயுள்வேத வைத்தியசாலைகளில் காணப்படும் சகல வெற்றிடங்களையும் நிரப்ப அரசு நடவடிக்கை மேற்கொளளவுள்ளது.

இந்தவகையில் 227 ஆயுளவேத வைத்தியர்கள் நியமிக்கப் படவுள்ளார்கள்.

வைத்தியர்களின் பற்றாக்குறை காரணமாக ஆயுள்வேத சிகிச்சையை பெற்றுக்கொள்வதில் நோயாளர்கள் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதற்குப் புதிய நியமனம் மூலம் தீர்வு காணப்படுமெனவும் சுதேச வைத்தியத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (க-7)

## அச்சுறுத்தலான பொருட்களை கண்டறிய அமெரிக்கா உதவும்!

இலங்கைக்கு உள்ளே கொண்டுவரப்படும் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலான பொருட்களைக் கண்டுபிடிப்பதற்கு அமெரிக்க உதவியுடன் கொழுமபு துறைமுகத்தில் நவீனரக உபகரண தொகுதியொன்று விரைவில் பொருத்தப்பட இருக்கின்றது.

இந்தத் தகவலை இலங்கைத் துறைமுக அபிவிருத்தி அதகார சபைத் தலைவர் கிருசாந்த் தெகரகொட வெளியிட்டுள்ளார்.

அமெரிக்க உதவியுடன் இந்தக் கருவி பொருத்தப்பட இருபபதையடுத்து இதுதொடர்பான பயிற்சிக்காகத் துறைமுக பாதுகாப்புப் பிரிவைச் சோந்த அதிகாரிகள் தற்போது அங்கு சென்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க4)

## தூத்துக்குடியில் மீண்டும் கடல் கொந்தளிப்பு அந்தமானில் நிலநடுக்கம் காரணமா என அச்சம்

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவின் சுலவேசி தீவின் அருகிலும, அந்தமானிலும் மீண்டும நிலநடுக்கம் ஏறபட்டது. சுலவேசியில் நேற்று முன்தினமும், அந்தமானில் நேற்றும் நிலநடுக்கம் ஏற்பட்டது.

ரிக்டர் அளவுகோளில் இது 5.5 என்ற அளவுக்குப் பதிவானது.

இந்நிலையில் தமிழகத்தின் குமரி, தூத்துக்குடி மற்றும் நெல்லை மாவட்டங்களில் அலைகளின் வேகம் மிகப் பயங்கரமாகவுள்ளது.

நெல்லையில் பெருமணல் பகுதியில் ராட்சத அலைகளால கரைகளில் நிறுத்தப்பட்டிருந்த படகுகள் தூக்கிவீசப்பட்டன.

அனுமன் ஆற்றுப் பகுதியில் கடல் நீர் புகுந்தது. இதனால் வீடுகளுககுள் தண்ணீர் புகுந்தது. சில வீடுகளின் சுவர்கள் சேதமடைந்தன.

நேற்றுமுன்தினம் நள்ளிரவிலும் அலைகள் அதிகமாக இருந்ததால் இப்பகுதி மக்கள் பீதியடைந்தனர். தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் வீரபாண்டியன் பட்டினத்தில் செந்தில் வீதி தெரு ஆகியவற்றில் கடல் நீர் புகுந்தது.

குமரி மாவட்டத்தில் ராஜாக்கமங்கலம் என்ற இடத்தில் கடலையொட்டிய தென்பகுதியில் நீர் புகுந்துள்ளது. தூத்துக்குடியில் மணப்பாடு, உவரி ஆகிய பகுதிகளிலும் இராட்சத அலைகள் வீசுகின்றன.

குமரி விவேகானந்தர் பாறையை மிக உயரமான, வேகமான அலைகள் தாக்கின. பயணிகள் அச்சத்துடனேயே அங்கு பொழுதைக் கழித்தனர். (து)

## கோவிலில் பூசை செய்யும் குரங்கு

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் ஷிண்டோ மதத்தவர் வழிபடும் 'ஹியி' என்ற கோவில் உள்ளது.

இக்கோவிலில் ஜிரோ என்னும் ஒரு குரங்கும் உண்டு. கோவில் என்றிருந்தால் குரங்குகள் இருப்பது சகஜம்தானே என்பவர்களுக்கு...

இந்த ஜிரோ கோவிலில் அன்றாடம் பூஜையும் செய்கின்றது. இதற்கு முன்பாகக் குரங்கும் கோவிலில் பூஜைகள் செய்து வந்தது. ஜிரோவையும் பூஜைக்குப் பழக்கிவிட்டார்கள்.

ஜப்பானிய கோவில் குருக்கள் பூஜைகள் செய்யும் போது எந்த உடை அணிந்தார்களோ அதேபோன்ற உடையைத்தான் இந்தக் குரங்கிற்கும் அணிவிக்கிறார்கள். பூசாரி உடையணிந்து வரும் ஜிரோவைத்தான் படத்தில் பார்க்கிறீர்கள். (து)



# நலம் தரும் இளநீர்



# இயற்கை தந்த அமிர்தம்

மனிதனுக்குப் பலவகையிலும் உதவி வருவது இயற்கையாகும். களைப்புற்றவேளையிலும், தூரப் பயணங்களின்போதும், சோர்வுற்ற வேளையிலும், சூடு அதிகமான போதிலும், வயிற்று ரோகங்களின் போதும் இன்னும் பல வகையிலும் பயன்படுவது அமிர்கம் போன்ற இளநீர் ஆகும். இந்த இளநீர் இயற்கை உணவுப் பதார்த்தங்களிற் தனிச்சிறப்புடையதாகும்.

பழங்காலந்தொட்டே எமது மக்கள் சமூகப் பழக்கவழக்கங்களிலும், நோய்க்குச் சிகிச்சைகளிலும, இறைவழிபாடுகளிலும் இளநீரை பெருமளவாக உபயோகித்து வருகின்றனர். நெடுந்தூரம் நடந்து களைப்புற்ற வேளையில் அமிர்தம் போன்ற பானமாக இளநீர் பயன்படுகின்றது.

இளநீரைத் தருகின்ற தென்னை மரத்தைச் 'செய்நன்றி மறவா மரம்' எனப் பெரியோர் போற்றுவார்கள். தென்னை மரம் செய்நன்றி மறவா மரமாக விளங்குவதற்குக் காரணம் அதன் தலையில் தாங்கியிருக்கும் தேங்காய், இளநீர் ஆகும்.

இதனை நன்கு உணர்ந்த தமிழ்ப்பாட்டியாகிய ஔவையாரும்

'நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால்
அந்நன்றி
நின்று தருங்கொல் எனவேண்டா –
நின்று
தளரா வளர்தெங்கு நாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால்'

என மிக அழகாகத் தென்னை மரத்தின் நன்றி உணர்வினை எடுத்துக் கூறியுள்ளார்.

இளம் தேங்காயின் உள்ளே உள்ள நீர்தான் கண்ணுக்குப் புலப்படாத விஷக்கிருமிகளற்ற, கேடில்லாத இயற்கை தரும்குடிநீராகும். இன்றைய விஞ்ஞானிகள் இதனை நன்கு ஆராய்ந்து இளநீரில் சோடியம், பொட்டாசியம், கல்சிய சுண்ணாம்புச்சத்து, இரும்புச்சத்து, தாமிரம், பொஸ்பரசு, குளோரின், கந்தகம் போன்ற மனித உடலுக்கு வலுவூட்டக்கூடிய முக்கியமான நல்ல சத்துக்கள் அடங்கியிருப்பதாக எடுத்துக் கூறுகின்றார்கள்.

எமது உடலை வளர்க்கக் கூடிய சத்துக்கள், யாவும் இளநீரில் இருப்பதனால், இது மிகச் சிறந்த பானமாக கொள்ளப்படுகின்றது. இளநீர் உடம்பிற்கு உறுதியையும், சுறுசுறுப்பையும் ஏற்படுத்துகின்றது. தென்னை இனங்கள் பலவாகச் சூரிய காந்தி, சந்திரகாந்தி, வத்தாவி, மாலைதீவு.எனப் பலவகைப்பட்டிருப்பினும், தேங்காய் இளநீர்ப்பானம் பாவிப்பதற்குத் தனிச்சிறப்புடையதாகவே கருதப்படுகின்றது.


ஆயினும் செவ்விளநீர் மருத்துவக்குணங்களில் மற்றைய இளநீரிலும பார்க்க மேலானதாகக்கொண்டு எல்லோராலும் பாவிக்கப்படுகின்றது. அன்றியும் செவ்விளநீர்த் தேங்காயிலிருந்து பெறப்படும் எண்ணெயும் தலைக்குக் குளிர்ச்சியையும், கேசத்திற்கு மிருதுவான தன்மையையும் தரும் என மருத்துவர்கள் விரும்பிப் பாவிக்கலாமெனச் சிபார்சு செய்கின்றனர்.

மக்களின் உடல்நலத்திற்கு இயற்கைதரும் சிறந்த பானமாகிய இளநிரை அருந்துவதன் மூலம் ஆரோக்கியமான நல்வாழ்வை நிலைப்படுத்தி உடலை ஓம்புவோமாக.

*நீர்வைமணி.*

# இவரைத் தெரியுமா? பரிசுப்போட்டி இல. 52

## படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?



உலக அழகிகளில் ஒருவரான இவர், சினிமாத்துறையிலும் பிரபலமானவர்...... இவரை உங்களுக்குத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.

நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இவரைத் தெரியுமா?**
**போட்டி இல:- 52**
**வலம்புரி ~ சங்குநாதம்**
**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம.**

குறிப்பு:-

சரியான விடை எழுதுபவர்களில் மூன்று போட்டியாளர்களுக்கு குலுக்கல்முறை மூலம் தெரிவுசெய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்.

பரிசுபெறும் அதிஷ்டசாலிகள் தமக்கான பரிசுப்பணத்தினை 'வலம்புரி' காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

### இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:-52

படத்தில் உள்ளவரின் பெயர் :-.........................


அனுப்புபவரின் முழுப்பெயர் :-.........................

அனுப்புபவரின் முகவரி :-.........................

.........................

.........................

### இவரைத்தெரியுமா? பரிசுப்போட்டி இல - 50 சரியான விடை





அறிஞர் அண்ணாத்துரை

### இவரைத் தெரியுமா பரிசுப்போட்டி இல. 50இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்

முதற் பரிசு :~கா.கமலராசினி, சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

இரண்டாம் பரிசு :~பா.ஜதுஸன், செட்டியார் மடம், வட்டுக்கோட்டை.

மூன்றாம் பரிசு :~இ. வசந்தினி ஏழாலை வடக்கு, ஏழாலை.

### சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர் பெயர் விபரம்

சி.கோவிந்தராஜன்,நல்லூர். T.S.சயந்தன், வட்டுக்கோட்டை. கே.அரசேஸ்வரன், நல்லூர். சி.இளங்கோ, உடுவில். திருமதி. S. பாக்கியநாதன், வட்டுக்கோட்டை. ச.சரவணன், கோண்டாவில். தி.திவ்வியா, வல்வெட்டித்துறை. பா.தனலட்சுமி, அரியாலை. கா.மரியதாசன், காரைநகர். அ.அனித்தா, வடலியூர். ந.சுந்தரமூர்த்தி, வடக்கம்பரை. க.கதிர்காமத்தம்பி கரவெட்டி. ம.மயில்வாகனன், பருத்தித்துறை. சி.தனுஷா, உடுப்பிட்டி. அ.யாழினி, கல்வியங்காடு. சு.விதுஷன், வண்ணார்பண்ணை. ச.திவ்வியன், அச்சுவேலி. ந.கலியுகதாசன், சங்கானை. ஞா.ஞானம், கைதடி. வே.வடிவேலு, கரவெட்டி. க.சுரேஸ, மல்லாகம். ச.கஸ்தூரி, வேலணை. த.கல்பனா, உடுப்பிட்டி. சி.கந்தையா, மந்துவில். க.மனோகரன் நாவற்குழி. ச.கந்தசாமி, வல்வெட்டித்துறை. ப.பார்த்தீபன், வரணி. ம.கார்த்திகா, உடுவில் . S.வனிதா, கொக்குவில். நா.சுதர்சன், நாவலர் வீதி. க.தர்மரூபன், மிருசுவில். க.பவித்திரா, கொடிகாமம். நா.கல்யாணசுந்தரம், பருத்தித்துறை. தே.வினோதரன், வேலணை. ந.நித்தியா, கரவெட்டி. ப.யதுகுலன், மானிப்பாய். மா.தர்சன், யாழ்ப்பாணம். ம.சுதன், சுன்னாகம். பொ.திருச்செல்வம், காரைநகர்.



ஜப்பானில் நகோயாவில் 185 நாள்களுக்கு நடைபெறுகின்ற கண்காட்சியில் ஒருவர் மட்டும் பயணிக்கும் டொயோட்டா வாகனத்தில் உவகையுடன் வலம்வரும் ஜப்பானியர்.

# மனிதர்களின் நிறங்கள்

மனிதனின் தோல் ஏன் வெவ்வேறு நிறங்களில் உள்ளது?

மனித தோலின் நிறத்துக்குக் காரணம் மெலனோசைட் என்ற நிறமுடைய செல்களின் அடர்த்திதான். இந்த செல்களில் மெலனின் என்ற கறுப்புப் பொருள் சேகரிக்கப்படுவதால். அச்செல் கறுப்பாகத் தோன்றுகிறது. மெலனோசைட்டுகளில் அடர்த்தியைப் பொருத்து நீக்கோரரக கறுப்பு முதல் ஐரோப்பிய சிவப்பு வரை பல நிறங்கள் ஏற்படுகின்றன.

மெலனோசைட் செயல் இழக்கும்போது தோலில் வெள்ளைப்புள்ளிகளும், லியூக்கோடெர்மாவும் ஏற்படுகிறது. மெலனோசைட் திட்டாக ஓரிடத்தில் குவிந்தால், அது மச்சமாக மாறுகிறது. பனி படர்ந்த ஐரோப்பாவில் குடியேறிய மனிதர்கள் தோல் நிறத்தை கொஞ்சம் இழநதனா. ஆபரிக்கா, இந்தியா, ஆகிய வெப்பம் மிகுந்த பகுதியில் குடியேறியவர்கள், புற ஊதாக்கதிரின் கொடுமையிலிருந்து காத்துக்கொள்ள தோலின் நிறத்தைக் காப்பாற்றிக்கொண்டனர். மற்ற நிறங்களெல்லாம் இந்த இரண்டு எல்லைகளின் இடை நிலைப் படிகள் தான்.

# மனித உடலில்...



* மொத்த எலும்புகள் ~206.

* மொத்த தசைகள் ~ 639.

* மிகப் பெரிய எலும்பு ~ தொடை எலும்பு.

* மிகச் சிறிய எலும்பு ~ ஸ்டேப்ஸ்.

* காதில் உள்ள மூன்று எலும்புகள் ~ மாலியஸ், இன்கஸ் ஸ்டேப்ஸ்.

* காதில் உள்ள திரவங்கள் ~ பெரிலிம்ப், எண்டோலிம்ப்.

* கடினமான பகுதி ~ பல் எனாமல்.

* கடினமான எலும்பு ~ மாண்டிபிள்.

* மூளையிலுள்ள திரவம் ~ செரிப்ரோஸ்பைனல் திரவம்.

* மூளையைச் சுற்றியுள்ள உறையின் பெயர் ~ மெனின் ஜெஸ்.

* தோலிலுள்ள நிறமி ~ மெலனின்.

* விலா எலும்புகள் எண்ணிக்கை ~ 12 சோடிகள்.

* தண்டு வடத்திலுள்ள எலும்புகள் எண்ணிக்கை ~ 33.

* நுரையீரலைச் சுற்றயுள்ள உறை ~ புளுரா.

* இதயத்தைச் சுற்றியுள்ள உறை ~ பெரிகார்டியம்.

* கபால நரம்புகளின் எண்ணிக்கை ~ 12 சோடி.

* தண்டுவட நரம்புகளின் எண்ணிக்கை ~ 31 சோடி.

* இதயம் துடிப்பது நிமிடத்துக்கு சராசரியாக ~ 72 முறை.

* நம் உடம்பிலுள்ள இரத்தக் குழாய்களிலேயே மிகப் பெரியது ~ மகாதமனி.


* பற்களின் எண்ணிக்கை ~ 32.

* சுரப்பிகளில் பெரியது ~ கல்லீரல்.

* பிட்யூட்டரி சுரப்பியே ~ தலைமைச்சுரப்பி.

* பிளாஸ்மா மற்றும் இரத்த செல்களாலானது ~ ரத்தம்.

# மீள்பார்வை



## பிரியானி விஜேசேகர எழுதிய

# இலங்கையில் பாராளுமன்ற வழக்கம்

### (தமிழாக்கம் : ஆர்.எஸ். வேதநாயகம்) 8



## அத்தியாயம் III

நிலையியற் கட்டளை 23க்கான காப்பு வாசகத்தின் படி அவசர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயம் பற்றிய கேள்வி யொன்று கேள்வி நேரத்தின் முடிவில் எதிர்க் கட்சித் தலைவரினால் அல்லது அங்கீகரிக் கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் தலைவா னால் கேட்கப்படலாம். அது பெரும்பாலும் ஒரு கூற்றாக இருக்கும். அத்தகைய ஒரு விடயததுக்கு ஒழுங்குப் பத்திரத்தின் மூலம் அறிவித்தல் கொடுக்க வேண்டியதில்லை. எனினும் மரியாதையின் நிமித்தம் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு உரிய அறிவித்தல் கொடுக்கப்பட வேண்டும். அமைச்சர் விரும்பினால் பதிலளிக் கலாம் அல்லது பதிலளிக்காது விடலாம். இது அடிக்கடி நடாப்படாத ஒரு வழக்கம்.

**8. அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானங்கள்**

மரபின் படி பாராளுமன்றம் எப்போதும் அதன் முன்னாள் உறுப்பினர்கள் காலமாகினால் அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானங்களை நிறைவேற்றுகின்றது. அத்தகைய தீர்மானங்களை எடுத்துக் கொள்வதற்குக் குறிப்பிட்ட கால எல்லை வரையறுக்கப்படவில்லை. இவ்விட யத்தில் நடப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அதிலும் குறிப்பாக அமைச்சர்களுக்கு முந்து ரிமை அளிக்கப்படுகின்றது.

இரங்கற் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகின்ற கட்சிகளின் தலைவர்களும் வேறு உறுப்பினர்களும் சபாநாயகரின் அனுமதியுடன் உரையாற்றலாம். ஒவ்வொரு அனுதாபத் தீர்மானத்தின் முடிவிலும் உரைகளைக் கொண்ட அறிக்கை இழப்புக்கு ஆளான குடும் பத்தின் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

**9. சமுகமளிக்காதிருப்பதற்கு அனுமதி கோரும் பிரேரணைகள்**

பிரேரணையொன்றைச் சபை ஏற்றுக்கொள்வதன் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் களுக்கு லீவு வழங்கப்படுகிறது. பாராளுமன்றத்தின் அனுமதியை முன்கூட்டியே பெறாமல், பாராளு மன்றத்தின் அமர்வுகளுக்குத் தொடர்ச்சியாக மூன்று மாதங்களுக்கு உறுப்பினரொருவர் வருகை தராதிருந்தால் அவரின் ஆசனம் வறிதாகுமென அரசியலமைப்பின் உறுப்புரை 66(ஊ) கூறுகின்றது. ஓராள் தெரிவத்தாட்சி அலுவலரால் தெரிவு செய்யப்பட்டவராகப் பிரக டனப்படுத்தப்படுவதன் பேரில் ஒரு பாராளுமன்ற உறுப்பினராகின்றார். எனவே அவர் பிரமாணங்களை எடுப்பதற்கு முன்னர் கூடச் சமுகமளிக்காதிருப்பதற்கான அனுமதியைச் சபையிடமிருந்து கோரமுடியும். இக்காலம் அவரின் வரவின்மை பதியப்பட்ட முதலாவது நாளிலிருந்து கணக்கிடப்படுகின்றது. நீண்டகாலப் பகுதிக்கு லீவு எடுக்க விரும்புகின்ற ஓர் உறுப்பினர் மூன்று மாத காலம் முடிவடைவதற்கு முன்னர் லீவுக்கான பிரேரணையைக் கொண்டுவரச் செய்ய வேண்டும்.

**10. அமைச்சுத் தொடர்பான கூற்றுக்கள்**

அமைச்சுத் தொடர்பான கூற்றுக்கள, கூற்றை விடுக்கின்ற அமைச்சரின் அமைச்சின் நோக்கெல்லையின் கீழுள்ள விடயங்கள் தொடர்பானவை. அத்தகைய கூற்றுக்கள் பற்றிச் சபாநாயகருக்கு முன்கூட்டியே அறிவித்தல் கொடுக்க வேண்டுமென்பதுடன் கூற்றின் முடிவில் எந்தவோர் உறுப்பினரும் எழுந்து அதைப்பற்றிய விவாதமொன்றையும் கோரலாம். எனினும் விவாதமொன்று சபையால் தீர்மானிக்கப்படும் பிந்திய ஒரு தேதியில் மட்டும் அனுமதிக் கப்படலாம்.

அமைச்சுத் தொடர்பான கூற்றுக்கள், அரசாங்கக் கொள்கை, அமைச்சரின் உத்தியோக பூர்வ வெளிநாட்டுப் பயணமொன்றின் பலன், அரசாங்கத்துக்கும் அந்நிய அரசாங்கங் களுக்கும் அல்லது முகவராண்மைகளுக்கும் இடையிலான ஒப்பந்தங்கள் போன்ற பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களுக்கு வரையறுக்கப்பட வேண்டும். அத்தகைய கூற்றுக் களின் முடிவில் கேள்வி எதுவும் அனுமதிக்கப்படுவதில்லை ஆயின் உறுப்பினர்கள் தெளிவு படுத்தும்படி கோருதலைச் சபாநாயகர் அனும்திக்கலாம். சபையின் முன்வைக்கப்பட்ட திருத்தமற்ற அல்லது தவறான கூற்றுக்களைத் திருத்துவதற்கும் அமைச்சுத் தொடர்பான கூற்றுக்கள் விடுவிக்கப்படலாம். கடந்த காலத்தில் உதவிக் குழுக் கூட்டங்களில் நிதி அமைச்சர் கலந்துகொண்டதன் பலன், ரூபாவை மிதக்கவிடுவதன் விளைவு ஆகியவற்றைச் சபைக்கு அறிவிப்பதற்கு அமைச்சுத் தொடர்பான கூற்றுக்கள் விடுக்கப்பட்டுள்ளன.

**11. தனிப்பட்ட விளக்கங்கள்**

எவரேனும் உறுப்பினருக்கெதிராகத் தனிப்பட்ட ரீதியில் கண்டனம் அல்லது கருத் துக்கள் கூறப்பட்டிருப்பின் அவ்வுறுப்பினர், சபையின் முன்னர் பிரேரணை ஏதுமின்றியே, தனிப்பட்ட விளக்கமொன்றை அளிப்பதற்கு உரித்துடையவராவார். அவருக்கெதிரான சாட்டுரை பாராளுமன்ற உறுப்பினரென்ற கோதாவில் செய்யப்பட்டிருக்க வேண்டியதில்லை.

இவ்வுரிமை சபையில் வெளியிடப்படும் விடயங்களுக்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. உறுப்பினரொருவர் பத்திரிகையில் அல்லது ஒரு நீதிமன்றத்தில் கண்டிக்கப்பட்டிருந்தால் அவர் சபையில் விளக்கமளிப்பதற்கு உரித்துடையவரல்ல. நிலையியற் கட்டளை 19இன் கீழ் விளக்கமளிக்க விரும்புகின்ற உறுப்பினர் எவரும் முதலில் சபாநாயகரின் அங்கீகா ரத்தைப் பெறவேண்டும். அவரின் விளக்கம் அவரின் நன்னடத்தையை எடுத்துக் காட்டும் வரம்புக்குட்பட்டிருக்க வேண்டும்.

உறுப்பினரொருவர் சபையில் சமுகமாயிருக்கும்போது அவருக்கெதிராகச் சாட்டுரை யொன்று செய்யப்படுமாயின் அவர் 84ஆம் நிலையியற் கட்டளைப்படி அத்தகைய கண்ட னத்துக்கு (உரையாற்றுகின்ற உறுப்பினர் இடமளித்தால்) உடனடியாகப் பதிலளிப்பதற்கு அல்லது சர்ச்சைக்குரிய பேச்சின் முடிவில் பதிலளிப்பதற்கு அனுமதிக்கப்படலாம். எனினும் அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் நீண்ட தனிப்பட்ட விளக்கமொன்றை அவர் அளிக்க முடியாது.

தனிப்பட்ட விளக்கமொன்றின் மீது மேலும் கேள்விகள் அனுமதிக்கப்படமாட்டா. தனிப் பட்ட விளக்கமொன்றைப் பாதிக்கப்பட்ட உறுப்பினர் தாமே நேரில் அளிக்க வேண்டும். அவரின் சார்பாக வேறெந்த உறுப்பினரும் அதனைச் செய்யமுடியாது. தனிப்பட்ட விளக்கமொன்றை அளிக்க விரும்புகின்ற ஓர் உறுப்பினர் கிடைக்கின்ற முதல் வாய்ப்பிலேயே அதனைச் செய்ய வேண்டும். இன்றேல் சபாநாயகர் அனுமதி மறுப்பதற்கு நியாயமுண்டு. விளக்கவரைபின் பகுதிகளைச் சபாநாயகர் நீக்கியிருந்தால் உறுப்பினர் அதன் அங்கீகரிக்கப்பட்ட பகுதியை மட்டும் வாசிக்க வேண்டும்.

**(‘நோக்கங்களைக் கற்பித்தல்’ என்பதையும் பார்க்க)**

**12) சிறப்புரிமைக் கேள்விகள்**
(பார்க்க ‘ சிறப்புரிமைகள் பற்றிய குழு’)

**13. முன்னறிவித்தல் தேவைப்படாத பொது அலுவல் ஆரம்ப நேரப் பிரேரணைகள்**
(பார்க்க ‘ பிரேரணைகள்’)

**14. முன்னறிவித்தல் தேவைப்படுகின்ற பொது அலுவல் ஆரம்ப நேரப் பிரேரணைகள்**
(பார்க்க ‘ பிரேரணைகள்’)


(தொடரும்)

# “போரும் சமாதானமும்” நூல் வெளியீடு

(லண்டன்)

“போரும் சமாதானமும்” என்ற கருத்துப்படும் **‘War and Peace’** என்னும் ஆங்கில நூல் கடந்த வெள்ளிக்கிழமை ஸ்காபரோ நகரசபா மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது. தத்துவா சிரியரும் அரசியல் ஆலோசகருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எழுதிய இந்த வரலாற்று ஆவண நூலின் வெளியீடு கனடாவில் கடந்த வெள்ளிக்கிழமை மண்டபம் நிறைந்து வழிந்த மக்களி டையே வெகு சிறப்பாக வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வை ரி.பிரகலாதன் வழிநடாத்தினார். நேரு குணரத்







தினம் நூலாசிரியர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை அறிமுகம் செய்து வைத்தார்.

தொடர்ந்து அருட் கலாநிதி சந்திரகாந்தன், “சுயநிர்ணய உாி மைக்கான தமிழரின் போராட்ட ஆரம்பமும் வரலாறும் என்ற தலைப் பில மிகச் சிறப்பான ஒரு உரையை வழங்கியதுடன், நூலின் சிறப் பையும எடுத்துரைத்தார். இந்த வரலாற்று ஆவண நூல், பல் கலைககழகங்களின் வரலாற்றுப் பிரிவில் பாடவிதான நூலாகப் பயன் படுத்தப்பட பரிந்துரைப்பதில் அனைவரினதும் பங்களிப்பை விதந் துரைத்தார்.

இறையியல் ஆய்வாளரும் தத்துவவியலாளருமான வண. மேரின சோமவில் என்ற ஆங்கிலப் பெண்மணி, “விடுதலைப் பயணமும் சமா தானமும்” என்ற தலைப்பில், மிக ஆழமான ஓர் ஆய்வுரையை வழஙகினாா. ஒரு அரசாங்கம் தனது சொந்த நாட்டுக் குடிமக் களை அடக்கி ஒடுக்குவதையும் அராஜகத்தைக் கட்டவிழ்த்து விடு வதையும தன்னால் புரிந்து கொள்ள முடியவில்லை என்றும், இது குறித்து தான் வெட்கப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

ஜனநாயக விழுமியங்களை சரியாகக் கடைப்பிடித்துவரும் கனடா போன்ற நாட்டு அரசுகளிடம் கூட, 25 வருடங்களுக்கும் மேலாக அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களது உரிமைகளைப் பெற றுக்கொள்ள உதவும்படி கெஞ்ச வேண்டியிருப்பதையும், அப் படிக் கெஞ்சியும் கனேடிய அரசு பாராமுகமாயிருப்பதையும் தன் னால் ஜீரணிக்க முடியவில்லை என்றும் அவர் தனது பேச்சில் குறிப் பிட்டார்.

எழுத்தாளர் வி.தங்கவேலு “வரலாற்றின் அவசியமும் அவற்றை சரியாக ஆவணப்படுத்துதலும்” என்ற தலைப்பில் உரையாற்றி னார். ஈழத் தமிழர்களின் வரலாறுகள் தொடர்ச்சியாக தெளிவாக கோர்வையாக ஆவணப்படுத்தப்படவில்லை என்றும், ஆண்டுகளில நிலவும் குழப்பத்தால், வரலாறு திரிபடைந்தோ அல்லது காலக் குறிப்பின்றியோ காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

பின்னர் நூலை அறிமுகம் செய்து வெளியிட்டு வைத்தார் கலா நிதி சிறிபவான் சிறீஸ்கந்தராஜா. மிகவும் உணர்ச்சிவசப்பட்ட வராக, தமிழரின் விடுதலை உணர்வைத் தக்கவைக்க, தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயலாற்றும் அவசியத்தைத் தெளி வாக எடுத்துரைத்தார். இனவாத உணர்வில் சிக்குண்டு கிடக்கும சிங்கள மக்களை விடுவிக்க வேண்டிய தேவை தற்போது எழுந் துள்ளது என்று குறிப்பிட்ட அவர், தமிழினத்தின் ஒற்றுமையை வளர்ப்பதுடன், கனேடிய மக்களுக்கும் எமது விடுதலைப் போராட் டத்தின் உண்மை நிலையை விளக்குவது ஒவ்வொருவரதும் கடமை என்றும் குறிப்பிட்டார்.

நூலின் முதற் பிரதியை, நோர்த்யோர்க் பாராளுமன்ற உறுப் பினர் யூடியின் சார்பில், அவரது செயலாளர் பெற்றுக்கொண்டார். இரண்டாவது பிரதியை பிரபல கலைஞரும் “இசைக்கு ஏது எல்லை” நிகழ்ச்சிப் பொறுப்பாளருமான வைரமுத்து சொர்ணலிங்கம பெற்றுக்கொள்ள, அதனைத் தொடர்ந்து ஏராளமான வர்த்தகப் பிரமுகர்கள், கலைஞர்கள் மற்றும் அறிஞர் பெருமக்களும் பிரதி களைப் பெற்றுக் கொண்டார்கள்.

நிகழ்வில் உரையாற்றியவர்கள் அனைவரும், கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் நீண்டகாலப் பங்களிப்பை விதந்துரைத்ததுடன், ஏனைய வரலாற்று நூல்களை ஆதாரமாகக் கொண்டு எழுதப்படும் நூலகளிலிருந்து முற்றாக வேறுபட்டு, தனது சொந்த அனுபவத்தை தனது உள்ளத்திலிருந்து முற்றாக வெளிக் கொணரும் வரலாற்று ஆவ ணமாக அவர் வெளிக்கொணர்ந்திருப்பதைப்பாராட்டினார்கள். (க-4)

# கடல்நீர் தரைக்கு வந்தமைக்கு ஏர்ப்பு சக்தியே காரணமாம்

(காலி)

காலி மாவட்டத்தின் ஹிக் கடுவ சீரிகமப் பிரதேசங்களுக் குள் கடல் நீர் தரைக்குள் உட் புகுந்தமை ஈர்ப்பு சக்தியால் ஏற்பட்ட தென வழி மண்டல வியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜீ.எச்.பி.தர்மரத்தின தெரிவித்துள்ளார்.

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் குறிப்பிட்ட பிரதேசங்களில் கடல் முன்னரை விட ஆழமடைந்துள் ளதினால் இந்த நிலைமை கடந்த ஆண்டுகளை விட இம் முறை சற்று அதிகமாகக் காணப்பட்டது.

ஹிக்கடுவையின் சில பிர தேசங்களில் கடல் மட்டத்தி லிருந்து 100 மீற்றர் பிரதேசத்துக்கு கடல் நீர் தரையை நோக்கி உட்புகுந்துள்ளது. ஹிக்கடுவ, சீலிகம, அக்குறளை, பாறை ளைய ஆகிய பிரதேசங்களில் கடலை யண்டிய தாழ்நிலப் பிரதேசங்க ளுக்குள் கடல் நீர உட்புகுந்துள்ளது.

உட்புகுந்த கடல் நீர் வழிந் தோடததினால் பிரதேசத்தின் போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற் பட்டுள்ளது. இதனால் தாழ்நிலப் பிரதேச மக்களை அங்கிருந்து வெளியேறுமாறு அறிவிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகி றது. (ற-8)

# புனருத்தாரணம்

(யாழ்ப்பாணம்)

மீசாலை வடக்கு வேம்பிராயைச் சேர்ந்த கலட்டியிற் பிள்ளை யார் கோயில் புனருத்தாரண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் சித்திரை மாதம் புனருத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் நடைபெற இருக்கிறது. (ப)

# நாகர்கோவில் பகுதி மக்களுக்கான சுனாமி நிவாரணம் வழங்கப்படவில்லை

## பருத்தித்துறையில் தங்கியிருப்போர் பிரதேசசெயலரிடம் முறையீடு

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு நாகர்கோவிலிலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் வாழும் மக்கள் தமக்கான சுனாமி நிவாரணம் இதுவரை வழங்கப்படாதமையை ஆட்சேபித்தும், உடனடியாகவே தமக்கான சுனாமி நிவாரணத்தைப் பெற்றுத் தருமாறு கோரியும் பருத்தித்துறை பிரதேச செயலருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நாகர்கோவில் கிராம அலுவலர் பிரிவில் நிரந்தரமாக வசித்துவந்த நாம் கடந்தகால இராணுவ நடவடிக்கைகள் காரணமாக 2000ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சியின் பல்வேறு பகுதிகளிலும் வசித்துவருகிறோம்.

அடிப்படை வசதிகளற்ற நிலையில் அகதிகள் முகாம்களிலும், உறவினர்கள், நண்பர்கள் வீட்டிலும் வசித்துவரும் எங்களுடைய சொந்த நிலங்கள் உயர்பாதுகாப்பு வலயமாக இருப்பதனால் மீளக்குடியமர முடியாதுள்ளோம்.

கரவெட்டி மற்றும் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுகளில் வசித்து வரும் சுனாமியால் பாதிக்கப்பட்ட நாகர்கோவில் பகுதி மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுவருகிறது.

ஆனால் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் வசித்துவரும் நாகர்கோவில் பகுதி மக்களுக்கு எந்தவொரு சுனாமி நிவாரணமும் வழங்கப்படவில்லை. இதுசம்பந்தமாகக் கிராம அலுவலர்களிடம் முறையிட்டபோதும் அவர்களால் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே, நாகர்கோவில் கிராம அலுவலர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் (வடமராட்சி வடக்கு) வசித்துவரும் குடும்பங்களுக்கு சுனாமி நிவாரணம் பெற்றுத்தரும்படி கேட்டுக்கொள்கிறோம் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் பிரதிகள் யாழ். அரசாங்க அதிபர், கடற்புலிகள், பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

(ப-35)

## மின்கம்பம் நடுகை

(புங்குடுதீவு)

புங்குடுதீவிற்கு மின்சாரம் விநியோகிப்பதற்காகக் கடந்த பாராளுமன்ற பொதுத் தேர்தல் காலங்களில் வீதிகளில் பறிக்கப்பட்ட மின்கம்பங்கள், பறிக்கப்பட்டும் நீண்டகாலமாக மின்விநியோக நடவடிக்கைகள் எடுக்கப்படாத நிலையில் காணப்பட்டன.

இந்நிலையில் வலம்புரி பத்திரிகையில் இதுகுறித்து வெளியான செய்தியினையடுத்து தற்போது புங்குடுதீவு ஆஸ்பத்திரி வீதி, மற்றும் பிரதான வீதி பகுதிகளில் மின்கம்பங்கள் நடுவதற்கான குழிகள் தோண்டப்பட்டுவருகிறது. (ப-126)

# சுனாமியால் பாதிப்புற்ற மாவட்டங்களுக்கு மேலதிக மாவட்ட செயலாளர்கள் நியமனம்

(கொழும்பு)

சுனாமி அனர்த்த புனர்நிர்மான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தும் வகையில் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு மேலதிக மாவட்ட செயலாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் டி.திஸநாயக்க இதுதொடர்பாகத் தகவல் தெரிவிக்கையில்,

இப்புதிய நியமனங்களுக்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறும நோக்கில் விஞ்ஞாபனம் ஒன்று சமர்ப்பிக்கப்படடுள்ளதாகத் தெரிவித்தார்.

நியமிக்கப்படவுள்ள மேலதிக மாவட்ட செயலாளர்கள், இடம்பெயர்ந்த மக்களுக்கு இருப்பிடவசதி வழங்கப்பட்டுள்ளதையும், வீடுகளைக் கட்டுவதற்கான காணி ஒதுக்கீடு செய்யப்படுவதையும், 100 மீற்றர் எல்லை கடைப்பிடிக்கப்படுவதையும் உறுதிப்படுத்துவார்கள்.

இதன்மூலம் மாவட்டச செயலாளர்களின் வேலைப்பளு குறைவடைவதுடன் புனரமைப்பு நடவடிக்கைகளையும் துரிதமாக மேற்கொள்ள முடியுமென்றும் திஸநாயக்க மேலும் தெரிவித்தார்.

அத்துடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில், நிவாரண நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்படவில்லையென்ற வகையில் பெறப்பட்ட அதிக முறைப்பாடுகளைத் தொடர்ந்து இந்நடவடிக்கை மேற்கொளளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இத்திட்டத்திற்கமைய காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, களுத்துறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களுக்குப் புதிதாக மேலதிக மாவட்ட செயலாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

அம்பாறை. மட்டக்களப்பு, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு ஏற்கனவே மேலதிக மாவட்டச் செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-7)

# "அழகெழல் - 2005" சித்திரம், சிற்பப்போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நுண்கலை மன்றம் நடாத்தும் 'அழகெழல் - 2005' கலைத்துறை சார் போட்டிகளில் முதற்கட்டமாக சித்திரம், சிற்பம் ஆகிய போட்டிகள் எதிர்வரும் 18ஆம் திகதி கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளன.

கிளிநொச்சி வலயப் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களுக்கென சித்திரப் போட்டிகள் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் குறிப்பிட்ட திகதியில் நடைபெறும்.

பாடசாலை மாணவர்களுக்கும், வெளியார்களுக்குமான திறந்த சிற்ப ஆக்கப் போட்டிக்கான ஆக்கங்களைப படைத்தவர்கள் அன்றைய தினமும் தங்களுடைய சிற்பங்களை மேற்படி கல்லூரியில் ஒப்படைக்கலாம்.

கிளிநொச்சி வலயப் பாடசாலைகளுக்கிடையேயான போட்டி விண்ணப்ப முடிவுத் திகதி (15.03.2005) இன்றாகும்.

போட்டி நடைபெறும் நாள் காலை 9.30 மணிக்கு அனைத்துப் போட்டியாளர்களும் கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

இதேவேளை, யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையேயான அழகெழல் போட்டிகள் மார்ச் 25,26ஆகிய திகதிகளில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறும்.

ஓவியப் போட்டியில் பங்குபற்றும் பாடசாலைகள் ஒவ்வொரு பிரிவிலுமிருந்தும் மூன்று போட்டியாளர்களுக்கு மேற்படாமல் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 20.03.2005 ஆகும். (க)

## திருட்டு

கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகில் உள்ள வீட்டில் அண்மையில் திருட்டுப்போயுள்ளது.

கந்தப்பு ஞானோதயன் என்பவரது வீட்டிலேயே இவ்வாறு சுமார் முப்பத்தெண்ணாயிரம் பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

இதுதொடர்பாகக், கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்துத் துரித விசாரணை நடைபெற்று வருவதாகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீ செல்வம் தெரிவித்தார். (ப-74)

# இஞ்சி இறக்குமதியின் போது வரி அறவிடுவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

அத்தியாவசிய உப உணவுப் பொருளான இஞ்சியை இறக்குமதி செய்யும்போது அதற்கு வரி விதிக்கப்படுமென்று கமத்தொழில், கால்நடை வளர்ப்பு, காணி நீர்ப்பாசன அமைச்சர் அனுரகுமார திஸநாயக்க தெரிவித்திருக்கிறார்.

நாரமல பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரை நிகழ்த்தியபோதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

உள்ளூர் இஞ்சி செய்கையாளர்களைப் பாதுகாப்பதே இதன் முக்கிய நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார்.

நிதியமைச்சுடன் இதுதொடர்பாக ஆலோசனை மேற்கொண்டு இறுதி முடிவு எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

வாசனைத்திரவியங்கள் உற்பத்தியில் பெருமளவு அறுவடையாகப் பெறப்படுகின்றபோதும் குறைந்த விலையிலேயே சில வர்த்தகர்கள் ஏற்றுமதி செய்வதனால் உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதனால் உற்பத்தியாளர்களைப பாதுகாக்க மேலும் பல நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (க-7)

## நீர்வேலியில் இடம்பெற்ற வன்முறைகளின்போது

# பொலிஸார் பொறுமை காத்திராவிட்டால் விளைவுகள் விபரீதமாகியிருக்கும்

## கோப்பாய் பொலிஸ் அதிகாரி செல்வம் கருத்து



பொறுப்பான பதவியில் இருக்கும் நாம் பொறுமையுடனும், மதிநுட்பத்துடனும் பணியாற்றவேண்டும என கோப்பாய் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி அருணகிரி செல்வம் தெரிவித்தார்.

நீர்வேலி பகுதியில் மூதாட்டி மது இராணுவச் சிப்பாய் ஒருவர் மேற்கொண்ட பாலியல் வல்லுறவு முயற்சியின் விளைவாகப் போராட்டம் பற்றி கருத்துத்தெரிவித்தபோதே கோப்பாய் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பாதகம் ஏற்படாத வகையில் நாம் மிகவும் சுமுகமாகப் பிரச்சினைகளைத் தீர்த்திருக்கின்றோம். மிகவும் பொறுமையுடன் கடமையைச் செய்ததன் பயனாக உயிராபதிற்கு இடமளிக்கவில்லை.

நாம் எந்தப் பதவியில் இருக்கின்றோமோ அப்பதவிக்குரிய கடமையைச் செய்தல் அவசியமானது. 'செய்யுந் தொழிலே தெய்வம்' என்ற உயரிய குறிக்கோளோடு சேவை செய்தல் வேண்டும்.

நாம் இச்சந்தர்ப்பத்தில் பொறுமையை இழந்திருந்தால் பெரிய உயிராபத்து நேர்ந்திருக்கும். பொது மக்களுக்குக் குந்தகம் ஏற்படாத வகையிலும், பக்கம் சாராமலும் சமநிலையிலே ஏமது கடமையைச் செய்தல் அவசியம் ஏன அவர் மேலும் தெரிவித்தார். (ப-74)

# வெளிநாட்டில் பணிபுரிவோரின் குடும்பத்துக்கு 10லட்சம் ரூபா கடன்

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்படட குடும்பங்களின் அங்கத்தவர்கள் எவராவது வெளிநாடுகளில் பணிபுரிந்தால், அவர்களின் குடும்ப அங்கத்தவர்கள வீடற்றவர்களாக இருக்கும் பட்சத்தில் அவர்களுக்குக் குறைந்த வட்டியில் 10 லட்சம் ரூபா கடனை வழங்க உள்ளூர் வர்த்தக வங்கிகள் முன்வந்திருக்கின்றன.

கடனைப் பெறுபவர்களிடமிருந்து 3 சதவீத வட்டியை மாத்திரமே வங்கிகள் அறவிடும்.

அதேவேளை மீதி வட்டித் தொகையை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் செலுத்தும்.

இவ்வீடமைப்புக்கான கடன்களை ஒழுங்குசெய்யவென தொழிலாளர் உறவுகள் அமைச்சின் இணைப்பு அதிகாரிகள் அத்தகைய குடும்ப அங்கத்தவர்களுடன் கலந்துரையாடஉள்ளனர்..

பத்து இலட்சம் இலங்கைத் தொழிலாளர்கள் பல்வேறு நாடுகளிலும் தொழில்புரிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-7)

## அன்பளிப்பு

புத்தூர் புத்தகலட்டி ஸ்ரீ விஸ்ணு வித்தியாலயத்திற்கு பட்டினிக்கெதிரான நிறுவனத்தினால் நீர் கொள்கலன் ஒன்று அண்மையில் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பாடசாலையில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலனைக் கருத்திற்கொண்டு 2000 லீற்றா கொள்ளளவுள்ள இக்கொள் கலனை புத்தூர் பிரதேச பொது சுகாதார அதிகாரி பொ.கோபாலேந்திரனின் சிபார்சுடன் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. (ப-74)

# அனுமதிப்பத்திரம் இன்றி சாராயம் விற்ற பெண்ணுக்கு அபராதம் விதிப்பு

(துன்னாலை)

அரச சாராயத்தை அனுமதிப்பத்திரமின்றி விற்ற குற்றச்சாட்டின் பெயரில் நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 10 ஆயிரம் ரூபா அபராதம் அவருக்கு விதிக்கப்பட்டது.

அபராதப் பணத்தைச் செலுத்தத் தவறின் 3 மாத கால சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும பருத்தித்துறை நீதிபதி க.அரியநாயகம் உத்தரவிட்டுத் தீர்ப்பளித்தார்.

இதேவேளை நீதிமன்றில் மதுபான வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டோரில் பெண்களே முன்னணியில் நிற்கின்றமை குறிப்பிடத்தக்கவிடயமாகும்.

(க-101)

## விண்ணப்பம் கோரல்

(சாவகச்சேரி)

அரசாங்க சேவையின் சிற்றூழியர்களை பொது எழுதுநர், தட்டெழுத்தாளர் சேவையின் II "அ" பிரிவுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு 2003/2004ற்கான விண்ணப்பங்கள் அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் இணைந்த சேவை பணிப்பாளர் நாயகத்தினால் கோரப்பட்டுள்ளது.

வருடாந்தம் 62,879 ரூபாவிற்கு குறைந்த வேதனத்தைப் பெறுபவரும், தாபனவிதி முதலாம் அத்தியாயத்துள் அடங்கும் உத்தியோகத்தரும், 2004 டிசம்பர் 31ஆம் திகதிக்கு உடன் முந்திய 3 வருட சேவைக் காலத்துடன் நிரந்தர நியமனத்திலுள்ளவரும், இதே திகதியில் 30 வயதிலும் குறைந்தவராயின் இரு தடவைக்குள் 6 பாடங்களில் சித்தி உடையவரும் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

30ற்கும் மேற்பட்ட வயதெனின் கல்வித்தகமை ஏற்புடையதன்று.

பரீட்சார்த்திகள் 2005 ஏப்ரல் 08ற்கு முன்பாக உரியமுறையில் விண்ணப்பங்களை அனுப்பவேண்டும். மேலதிக தகவல்களை மார்ச் 04 வர்த்தமானிப் பத்திரிகையில் பார்வையிடலாம். (க-2)

# இயேசுவை நல்லடக்கம் செய்த மேசைவிரிப்பில்

இயேசு கடைசி இராபபோசனத்தின் போது பெரிய வியாழக் கிழமை மேசை விரிப்புக்காக பயன்படுத்தப்பட்ட துணி அவரது மரணத்தின்போது பயன்படுத்தப்பட்டதாக அண்மைக்கால ஆய்வுகள் தெரிவிக்ககின்றன. யூதர்களின் பட்டினமாகிய அரி



மத்தோயாவிலிருந்து வந்த யோசோப்பு என்பவருடைய வீட்டிலேயே கடைசி இராப்போசனம் நடைபெற்றுள்ளது.

உத்தமனும், நீதிமனுமாகிய யப்பட வேண்டியதாயிற்று எனவே துணியை விரித்து இயேசுவை வளர்த்தி மறுபாதியில் முகம் முதல் பாதம்வரை மூடிக்கல்லறையில் வைத்தனர்.

அநதத் துணியை எடுத்து அவதானித்தால் முகம் முதல் பாதம வரை ஒரு பக்கமும், தலைமுதல் முதுகுப்புறமாக பாதம்வரை மறு பக்கமும் பதிந்திருந்தது.

பிரதி விம்பத்தை அதாவது முழு உடலின் உருவத்தை அநதத்துணியில் காணக்கூடியதாக விருந்தது. இயேசு சிலுவையில் அறையப்பட்டிருநத இடத்தற்கு அருகாமையில் இருந்த ஒரு தோட்டத்திலிருநத புதிய கலலறையில் விரைவாக எடுத்துச்செல்லப்பட்டு வைக்கப்பட்டது. நீக் நிலைகளில் இருந்து இந்த அரும் பெரும் பொருளை பாதுகாப்பதற்காக கொன்ஸ்தாந்தினோபில் வழியாக பிரான்ஸிற்கு எடுத்து வரப்பட்டது. கி.பி.1147 ஆம் ஆண்டு 7ஆம் லூயி மன்னன் காலத்தில் இத்துகிலுக்கு பெருமதிபபு வழங்கப்பட்டது 1204ஆம ஆண்டு சிலுவை யுத்தத்தின்போது அரும்பெரும் சின்னமாகக் கருதப்பட்ட இத்துகில் பாதுகாப்பான இடத்தில் மறைத்துவைக்கப்பட்டது.

1353இல் மீண்டும் பொதுமக்கள காட்சிககு வைக்கப்பட்டது 1506இல் பரிசுதத பாப்பரசர் 2 ஆம் ஜூலியஸ் திவ்விய பூசைப்பலியுடன் இந்தத்துயிலை புனித சின்னமாகப் பகிரங்கப்படுத்தி நவநாள்

# திருவுருவம் பிரதி பிம்பமாக பதிந்து திருத்துகிலாகியது

இவர் தேவனுடைய இராஜ்ஜியத்தைக்காண காத்திருந்தவரும் யூதர்களின் ஆலோசனைகளுக்கும், செயற்றிட்டங்களுக்கும் இணங்காதிருந்தவருமாவார். அவன் பிலாத்துவினத்தில் போய் இயேசுவின் திருவுடலை அடக்கம் செய்ய அனுமதிகேட்டு அதைச் சிலுவையிலிருந்து இறக்கினார். அனறு ஓய்வு நாளாக இருந்தபடியால் விரைவாக அடக்கம் செய்யப்படவேண்டியதாயிற்று எனவே இராப்போசனத்திற்குப் பயன்படுத்தப்பட்ட துணியால் அவரது திருவுடலை விரைவாகச சுற்றி கன்மலையில் வெட்டப்பட்டதும், எவரையுமே வைத்திருககாத கல்லறையில் வைத்தார். அக்காலத்தில் நல்லடக்கம் செயவதற்குப பயன்படுத்தப்படும் துணியைப் பீடத்தில் வைத்து எடுக்கும் வழக்கமும் இருந்து வந்துள்ளது

சூரிய அஸ்தமனத்திற்கு முன்னரே எல்லாம் அடக்கம் செய் கோதேழு என்பவர் வெள்ளைப போளமும், கரிய பவளமும் கலந்து ஏறத்தாழ நூறு இராத்தல் எடையான இவை இயேசுவின் உடலோடு வைக்கப்பட்டிருந்தார். வாரத்தின் முதல்நாள் அதிகாலையிலேயே மகதலேனா மரியாள் யாக்கோவின் தாய், மரியாள் சலோமே ஆகியோர் வந்து பர்த்த போது கல்புரட்டப்பட்டு இருந்தது.

இயேசுவைக் காணவில்லை அவரைப் போர்த்தி மூடியிருந்த துணி மட்டுமே காணப்பட்டது. தற்போது இத்துணி அருமபொருட்சிப் பொருளாகவும், புனிதப் பொருளான திருத்துகிலாகவும் விளங்குகின்றது.

கி.பி.544இல் இயேசுவைப் போர்த்தியிருந்த துணியான மேசைவிரிப்பு அவரது திருவுருவம் பதியப்பட்டு துருக்கியில் ஏடினா என்னுமிடத்தில் அரும் பெரும்காட்சிப் பொருளாக வைக்கப்பட்டது.

ஜெருசலேமில் ஏற்பட்ட சூழ் ஆராதனை செய்வதற்கு அனுமதிவழங்கினார். 1532இல் ஷாம் பெரி தேவலாயத்தில் ஏற்பட்ட தீவிபததில் ஏற்பட்ட சிதைவுகளை அருட்சகோதரிகள் மறுசீரமைத்தனர்.

1578இல் புனித சார்ள்ஸ், பொறோமியோ நாட்டில ஏற்பட்ட கொடிய காய்ச்சலைப் பரவாது தடுத்து நிறுதத பிரார்த்தனை செய்தார். அது அவரின் பிரார்த்தனை மூலம் அது நிறைவேறியது. 1694ஆம் ஆண்டு ஜூன்மாதம் முதலாம் திகதி டியூகின் போராவியத்தில் திருத்துகில் கொண்டுவரப்பட்டு இதன் விபரங்கள் பகிரங்கமாக வெளியிடப்பட்டன.

கண்டி மறை மாவட்டத்தின் அம்பிட்டிய புனித ஆசீர்வாதப்பர் "மொண்டேபானோ" குருமடத்தல் இந்த புனித திருத்து கிரலுக்கான ஆதாரங்களை அறிந்து கொள்ளலாம்.

**தொகுப்பு நோயல்**

# சட்டம், மருத்துவத்துறை மீதான மக்களின் நம்பிக்கை குறைந்துள்ளது

சட்டம் மற்றும் மருத்துவத் துறை தொடர்பில் மக்களின் நம்பிக்கை குறைவடைந்து வருவதாக கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட தொழிலில் ஈடுபட்டுள்ளவாகள் மத்தியில் நேர்மையின்மை நிலவிவருகிறது. இதனால் மக்கள் மத்தியில் நம்பிக்கையற்ற ஒரு தன்மை ஏற்பட்டுள்ளது. குற்றச்செயல் களுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு அரசின் பாதுகாபபுக் கிடைப்பதினால் நாட்டில் நீதியை நிலைநாட்டுவதற்குப் பதிலாக துப்பாக்கி கலாசாரம் ஒன்று உருவாகி வருகின்றது.

சடடம் மருத்துவநோய் ஆய் வாளர் கல்லூரியின் 4 வது தலைவரை வரவேற்கும் முகமாக நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரச மருத்துவ அதிகாரிகளாகத் தொழிலை ஆரம்பிக்கும் நாம் மருத்துவ சட்டநடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றோம். இருப்பினும் சிலருககு மாத்திரமே சட்டமருத்துவநிலை ஆய்வாளருக்கான பயிற்சியுள்ளது. பலருக்கு நீதிமன்ற நடைமுறைகளோ சட்டமருத்துவம் தொடர்பகவோ தெரியாது.

கனிஷ்ட மருத்துவ அதிகாரிகளுக்கு பயிற்சியை வழங்கும் செயற்திட்டமொன்று சுகாதார அமைச்சிடமில்லை இந்த கனிஷ்ட மருத்துவர்களில் 70சதவீதமானோர் சட்டமருத்துவ நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனா. இதில் இரகசியம் எதுவுமில்லை.

அத்துடன், இவர்களினால் பல தவறுகளும் இடம்பெறகின்றன. இதனால் குற்றவாளிகள் தபபிச் செல்லவும வாயப்பு உண்டு. எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ற-8)

## "ஆண்டவரே என் மன்றாட்டைக் கேட்டருளும், என் அபயக்குரல் உம்மிடம் வருவதாக"



இரயில்வே பணியாளர் ஒருவருக்குப் பிரிவு உபசார விரந்து. வரலாறு காணாத கூட்டம். அவரைப் பலரும் பலவாறு புகழ்ந்து பெசினர். ஒரு சாதாரண தொழிலாளிதான. கடமை தவறாதவர், கருமமே கணானவர். குடும்பத்தில் உடல் நலமிலலை, மழை, வெயில என்ன இருந்தாலும் கடமை தவறாமல் பணியாற்றியவர். இவ்வாறு பலவாறு அவரைப் புகழ்ந்

**தவக்காலச் சிந்தனை**

தார். ஆனால்அவர் பணி இரயில் வநதவுடன் ஒரு சுத்தியலால் இரண்டு பெட்டிகளுக்கு இடையே உள்ள இணைப்பை தட்டிப்பார்ப்பதுதான். எல்லோரும் பேசி யபின், ஏற்புரையாக ஒய்வு பெறும் அவர் பேசினார், "எல்லோ ரும் என் பணியைப் பற்றி பேசினீர்கள். நான் என் கடமையைத் தான் செய்தேன். வேறொன்றும் செய்யவில்லை. ஆனால், எதற்காக சுத்தியலால் தட்டினேன் என்று எனக்குத் தெரியாது என்றார். இவ்வுலகில் பலர் பொருளற்ற வாழ்வு வாழக்கின்றனர். ஏதோ மனிதர் பிறந்துவிட்டார். ஏனோ மரம் போல வளர்ந்துவிட்டார் என்று பட்டினத்தார் சொல்வார். மனி தராகப் பிறந்த ஒவ்வொருவரும் தன்னைத்தானே பார்த்துக் கேட்க வேண்டிய கேள்வி, நான் யார்? எங்கிருந்து வந்தேன்? எங்கே செல்கின்றேன்?

காவலன்

## மஹோற்சவம்


(புங்குடுதீவு)


புங்குடுதீவு கலட்டி பிளளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 22ஆம் திகதி தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் சிறப்பாக நடைபெறவுள்ளன.

(க-126)


## பொன் அணிகளின் போரின் பரிசளிப்பு விழாவின்போது...











கடந்த சனியன்று நிறைவுபெற்ற "பொன் அணிகளின்" போர் கிரிக்கெற் போட்டியின் பரிசளிப்புவிழாவில் புனிதபத்திரிசியார் கல்லூரி அதிபர் உரையாற்றுவதையும், வெற்றிக்கேடயத்துடன், பத்திரிசியார் கல்லூரி அணித்தலைவர் சுரேனும், சகலதுறை ஆட்டக்காரர் விருதுபெறும் பத்திரிசியார் கல்லூரி அணிவீரர் வின்சனும், ஆட்ட நாயகன் விருதுபெறும் பத்திரிசியார் கல்லூரி அணிவீரர் விதுபாலாவும், சிறந்த துடுப்பாட்ட வீரர் விருது பெறும யாழ்ப்பாணக்கல்லூரி வீரர் நிருபரனும் பரிசில்களைப் பெறுவதைப் படத்தில் காணலாம்.

(படங்கள்:- நோயல்)

# நேற்றைய கண்டனப் பேரணியில்..







## வயோதிப் பெண் மீதான வல்லுறவு முயற்சியை எதிர்த்து கோஷம் எழுப்பும் மக்கள்






## போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர்க்கு விளக்கம்




## தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆவேஷம்



# நிவாரணப் பொருட்கள் கண்டுபிடிப்பு; பொலிஸார் விசாரணை நடாத்துவர்

(காத்தான்குடி)

மட்டக்களப்பு மண்முனைப் பற்று (ஆரையம்பதி) பிரதேச செயலக காணிக்குள் புதைக்கப்பட்ட நிலையில் ஆழிப் பேரலை நிவாரணப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் பொறுப்பு பொலிஸாரிடம ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் வி.சண்முகம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், குறிப்பிட்ட நிவாரணப்பொருட்கள் தொடர்பாக பிரதேச செயலாளர் தெரிவித்துள்ள தகவல்களுக்கும் பொதுமக்கள் தெரிவித்துள்ள தகவல்களுக்குமிடையில் முரண்பாடுகள் காணப்படுகின்றன.

இரு வாரங்களுக்கு முன்பு பாவனைக்கு உதவாத பொருட்கள் என பொது சுகாதார பரிசோதகர்களினால் உறுதிப்படுத்தப்பட்ட அரிசி, பால்மா, சீனி மற்றும் பருப்பு போன்ற பொருட்கள் ஒரு இடத்தில் குழிவெட்டி புதைக்கப்பட்டதாக பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

ஆனால் பொதுமக்களினால் வேறு ஒரு இடத்தில் நிவாரணப் பொருட்கள் புதைக்கப்பட்ட நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுளளது. அந்த பொதிக்குள் பிரதேச செயலகம் ஊடாக வழங்கப்படாத மருந்து போன்ற சில நிவாரணப் பொருட்களும் காணப்பட்டுள்ளன.

இபபடி முரண்பாடுகள் இருப்பதால் இதனை பிரதேச செயலக அதிகாரிகள் புதைத்தார்களா? அல்லது வேறு யாரும் அங்கு கொண்டு வந்து புதைத்தார்களா? என்பது குறித்து விசாரணை நடத்த வேண்டியிருப்பதால் இதுபற்றிய பொறுப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றார். (க)

## கோரிக்கை

காரைநகர் வலந்தலைச் சந்திகக அண்மையில் பிரதேச செய லகத்திற்கு முன்பாக உள்ள கடற் படையின் வீதித் தடையை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு காரை நகர் பிரதேச செயலிடம் பொது மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

காரைநகர் மேற்கு வீதியின் இருபகுதிகளிலும் கற்கள் அடுக் கப்பட்டு வாகனங்களின் வேகத் தினை தடுப்பதற்காக வீதியின் குறுககே வீதித்தடையும் அமைக் கப்பட்டுள்ளது.

இதனால் இப்பகுதியில் வீதி விபத்துக்களும் அதிகளவில் ஏற் படக்கூடிய சாத்தியக்கூறுகளைச சுட்டிக்காட்டியே இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ப-246)

# இன்று ஒரு தகவல்

## ஆசையும் அனுபவமும்

உலகிலே ஆசை! ஆசை! என்று ஏதோ ஒரு விதத்தில் மக்கள் வாழ்வில் மண்ணாசை எனவும், பொன்னாசை எனவும், பெண்ணாசை எனவும் பட்டம், பதவி ஆசை எனவும் ஏதாவது ஆசை வசப்பட்டு உழல்பவர்களாகவே உள்ளனர். இப்படி ஆசைகளை வளர்த்துக்கொள்வதால் பிறர் படும் துன்பங்களை பார்த்து நம்மை நாமே பக்குவப்படுத்திக் கொள்வதே சிறந்ததாகும். எல்லாம் இறைவன் செயல் எனும் நம்பிக்கை வழியிற் பார்ப்போமாயின் ஆசையை வளர்ப்பதும் இறைவன் செயல் தானே. அதற்கு நாங்கள் என்ன செய்வது? என்றே எண்ணத்தோன்றுகின்றது.

எந்த ஆசை என்பதில் மனம் நாட்டமுற்றால் தான் விரும்பும் ஆசையை அடைய மனம் எத்தனை எத்தனை பாடுகள் படுகின்றது. ஆசை மேலேட்டினால் நிதானமிழந்து என்ன என்னவெல்லாமோ செய்ய முயல்கின்றது. ஆசையின் மேலேட்டினால் மனம் போன போக்கிலே வேகமாகச் செயற்பட்டு பலத்த அடிகள், துன்பங்கள், உழைச்சல்கள் பட்டு நல்ல அனுபவங்களைப் பெறுகின்றது.

இதனாற்தான் ஆன்றோர் பட்டறிவே அனுபவம் எனவும் பட்டாத்தானே தெரிகின்றது. பாசமும் நேசமும் பலவும் என்றும் எடுத்துக்கூறுகின்றனர். இதனை நன்கு புரியவைப்பனவாக உள்ளன. எமது பழம் பெரும் இதிகாசங்களான இராமாயணம், மகாபாரதம் போன்றனவும் மற்றும் பல புராணக்கதைகளுமாகும்.

மேலும் இன்றைய உலகத்திலே பல்வேறுபட்ட ஆசைகளாலும் மக்கள் தம் மனமறிந்தே செய்யும் தவறுகள் தாமே எத்தனை எத்தனை? ஆசைக்கு ஓர் அளவில்லை என மாறி மாறி வரும் பல்வேறு ஆசைகளும் மனிதனை மனிதப்பண்புடன் வாழப் பெரும் போராட்டங்களுக்குத் தள்ளி விடுகின்றன.

அனுபவ அறிவின் மூலமும் ஆசையை அடக்குவதன் மூலமும் காலம், இடம் ,நேரம் அறிந்து அதனைக் கட்டுப்படுத்திச் செயற்படுவதன் மூலமும் மனிதன் மனிதப்பண்புடன் வாழலாம்.

ஆண்டவன் ஆசையை ஏற்படுத்தியதற்கு காரணமே மக்கள் பட்ட அறிவின் அனுபவத்தால் தம்மைத் தாமே நன்கறிந்து உயர்வடைய வேண்டும் என்பது தான். இதை நன்றாக எமக்கு உணரவைப்பது புராணங்களில், இதிகாசங்களில் வரும் ராமன், ராவணன், நளன், அரிச்சந்திரன் போன்றோரின் கதைகளாகும்.அவர்களின் ஆசை அனுபவப்பட்ட அறிவுகளுமே ஆகும்.

இதனை எழுதிக்கொண்டிருக்கும் போது பக்கத்து வீட்டுக்காரர் காயங்களுடன் மெல்ல மெல்ல ஏதோ முணுமுணுத்துக் கொண்டுவந்தார். அவரிடம் "ஏனப்பா ? என்ன நடந்தது!" எனக்கேட்ட போது "நல்ல அனுபவம், நல்ல பாடம் படித்து விட்டேன் போதும்! போதும்!" என்றார். ஏன் ? என்ன நடந்தது என அனுதாபத்துடன் கேட்டதற்கு

தொட்ட பின் பாம்பு என்றும்
சுட்ட பின் நெருப்பு என்றும்
பட்டபின் உணர்வதே என்
பழக்கம் என்றான பின்பு எனவும்

கண்வழி செரியும் உப்பு
கடவுளால் வருவதில்லை
மண்வழி வரலாம்!
பெற்ற மகன் வழி வரலாம் சேர்ந்த
பெண் வழி வரலாம் செய்த
பிழை வழி வரலாம்!ஆனால்
நண்பர்கள் வழியில் தான்
நான் கண்ட கண்ணீர் உப்பு!

எனவும் கண்ணதாசன் பாடல்களை பாடி, கல்வி அறிவிலும் அனுபவ அறிவே மேலானது என்பதைப் பட்டறிவினாலும் அடியினாலும் தெரிகின்றது எனக் கூறிச் சாய்ந்துபடுத்துக் கொண்டார்.

"ஆசை வெட்கம் அறியாது"

நீர்வைமணி

# போஸ்டர்களை ஒட்டி எனது பணியை நிறுத்திவிட முடியாது

## பீற்றர் ஹரோல்ட்

(கொழும்பு)

**மதில்களில் போஸ்டர்கள் ஒட்டப்படுவதில் நான் கவனம் செலுத்தவில்லை. அதற்காக எனது பணியை நிறுத்திக் கொள்ளவும் மாட்டேன் என உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் கூறியுள்ளார்.**

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உத்தியோக பூர்வமற்ற அரசாங்கம் இருப்பதாக பீற்றர் ஹரோல்ட் தெரிவித்ததாக குற்றம் சுமத்தி, அவருக்கு எதிராக இடம்பெறும் ஆர்ப்பாட்டங்கள் குறித்து பேட்டி ஒன்றில் கேட்கப்பட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

**அவர் இது குறித்து மேலும் கூறுகையில்,** நான் வார இறுதி பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கூறிய விடயங்கள் தவறாக திரிபுபடுத்தப்பட்டுள்ளமையால் துரதிர்ஷ்டவசமான நிலைமை உருவாகியுள்ளது. இது குறித்து கவலைப்படுகிறேன்.

நான் அத்தகைய கூற்றை வெளியிடவில்லை. நான் இந்நாட்டில் வறுமையை ஒழிப்பதற்காக பணியாற்றுபவன். சுனாமி அனர்த்தத்தின் பின்னர் நாட்டில் வறுமை மேலும் அதிகரித்துள்ளது.

ஆனால் நாம்நாட்டை மீளக்கட்டியெழுப்பும் பணியில் ஈடுபட்டுள்ளோம். நகர்ப்புறங்களில் மதில்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தாலும் நான் அது குறித்து அக்கறை செலுத்தமாட்டேன். எனது பணியை நிறுத்தவும் மாட்டேன்.

இந்த சர்ச்சை ஏற்பட்ட பின்னர் பொலநறுவை பிரதேசத்தில் எமது செயற்றிட்டங்கள் மூலம் நன்மையடைந்த கிராம மக்கள் என்னிடம் வந்து ஏழைகளான எங்களுக்காக நீங்கள் செய்த சேவைகளை நாம் அறிவோம். அந்த விவகாரத்தை கருத்திற் கொள்ள வேண்டாம் எனக் கூறினர்.

இந்தப் பிரதிபலன் எனக்குப் போதுமானதாகும். உலக வங்கி இலங்கையின் இறைமைக்கு மதிப்பளித்தே செயற்படுகின்றது. அதற்கு பங்கம் விளைவிக்கும் எதையும் நாம் செய்வதில்லை. இப்போதும் அவ்வாறான நிகழ்வு எதுவும் இடம்பெறவில்லை என்றார்.

**சுனாமி அனர்த்த மீளமைப்புப் பணிகளுக்காக அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பொதுக்கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவது குறித்துக் கேட்டபோது,** அதை அரசாங்கம், புலிகள் அமைப்பு, முஸ்லிம் சமூகத்தினர் ஆகியோரே தீர்மானிக்க வேண்டும். மீளக்கட்டியெழுப்புதல் நடவடிக்கைகளுக்காக இவ்வாறான முறை ஒன்று இருந்தால் நல்லது. அதற்கு நிதியுதவி நிர்மாணப் பணிகளை மேற்கொள்வது சுலபமாகும்.

ஏனெனில் சுனாமியினால் வடக்கு- கிழக்கு கரையோரப் பிரதேசங்களே கூடுதலாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். எமது கணிப்பின் படி 60 சதவீதசேதம் அப்பகுதியிலேயே ஏற்பட்டுள்ளது என்று பதிலளித்து உள்ளார்.

அவ்வாறான **கட்டமைப்பு ஒன்று இல்லாத நிலையில் வடக்கு- கிழக்கு பிரதேசத்திற்கு நீங்கள் எவ்வாறு நிதியுதவி அளிப்பீர்கள எனக் கேட்ட போது** சகல உதவிகளையும் வடக்கு- கிழக்கு மாகாண சபை மற்றும் மாவட்ட செயலாளர்கள் மூலம் வழங்குவோம் என பதிலளித்தார். (க)

# சட்டத்திற்கு முரணாக தேர்தல் முறை மாற்றப்படுவதற்கு ஐ.தே.க கண்டனம்

(கொழும்பு)

சட்டத்திற்கு முரணாக தேர்தல் முறையையோ அல்லது அரசியல் அமைப்பினையோ மாற்றுவதினை ஐக்கிய தேசியக் கட்சி கண்டிப்பதாக ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

10 வருடங்களாக நிறைவேற்று ஜனாதிபதி முறையைப் பாதுகாத்து வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் பதவிக்காலம் முடிவடையும் வேளையில்,அந்தப் பதவியை மாற்றுவதற்கு எடுத்துள்ள யோசனையில் உள்நோக்கம் ஒன்று உண்டு எனவும் ஜி. எல். பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆட்சிக்காலத்தின் போது இது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கைகளும் எடுக்காமல் பதவி முடிவடையும் காலத்தில் நிறைவேற்று ஜனாதிபதி முறையை மாற்றுவதற்கு எடுத்துள்ள முயற்சி மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கத்துடனேயே ஆகும் எனவும் ஜி.எல். பீரிஸ் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

சமஷ்டி ஆட்சிமுறை மற்றும் தற்போதைய தேர்தல் முறை ஆகியன தொடர்பாகவே ஜனாதிபதி தற்போது கவனம் செலுத்தியிருப்பதாகச சுட்டிக்காட்டிய ஜி.எல்.பீரிஸ், அவ்வாறான திருத்தத்தை சட்டவிரோதமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துவருவதாகவும் தெரிவித்துள்ளார். (ற-9)

# நயினை அம்மனின் படத்திலிருந்து திருநீறு சொரியும் அற்புதம்

(கொழும்பு)

நயினை நாகபூஷணி அம்பாளின் படத்திலிருந்து திருநீறு சொரியும் அதிசய நிகழ்வு வெள்ளவத்தையிலுள்ள நயினாதீவைச் சேர்ந்த பரமேஸ்வரன் என்பவரது வீட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

கடந்த சனிக்கிழமை காலையிலிருந்து அவரது பூஜை அறையில் வைக்கப்பட்டுள்ள சிவலிங்கத்தைப் பற்றிப் பிடித்திருக்கும் நாகபூஷணி அம்பாளின் படத்திலிருந்தே திருநீறு சொரிந்த வண்ணமுள்ளது.

இவ் அதிசய நிகழ்வு குறித்து நேற்றுமுன்தினம் பரமேஸ்வரனிடம் கேட்டபோது அவர் எமக்குத் தெரிவித்த விடயங்கள் வருமாறு,

நான் வழமைபோன்று சனிக்கிழமை காலையும் பூஜை செய்வதற்காக பூக்களுடன் பூஜை அறையினுள் சென்று சுவாமிப் படங்களுக்கு பூக்களை வைத்துக்கொண்டிருந்தேன்.

இதன்போது நயினை நாகபூஷணி அம்பாளின் படத்திலிருந்து ஈரத்தன்மையான திருநீறு கீழே சொரிந்து கொண்டிருந்தது. அம்பாளின் கைகள், சிவலிங்கம் மற்றும் மலை இடுக்குகள் என்பவற்றிலிருந்து தீருநீறு வந்து கொண்டிருந்தது.

இதனைக் கண்ட நான் ஏனையவர்களுக்கும் தெரியப்படுத்தியதையடுத்து இங்கு வந்து பலரும் இவ் அதிசய நிகழ்வைக் கண்டு தரிசித்தனர்.

சனிக்கிழமை காலையிலிருந்து சொரியத் தொடங்கிய திருநீறு இன்னமும் வந்து கொண்டேயிருக்கிறது. இந்தத் திருநீறு இதுவரை என்றுமே அறிந்திராத ஒரு சுகந்தமான வாசனையாக இருக்கிறது என்று அவர் கூறினார்.

இதேவேளை, இவ்வாறானதோர் மற்றொரு அதிசய நிகழ்வு சிவராத்திரி தினத்தன்று இரத்மலானை சொய்சாபுரத்திலுள்ள விமலாஜி என்பவரது வீட்டிலும் இடம்பெற்றுள்ளது. இவ் அதிசயம் குறித்து விமலாஜி எமக்குத் தெரிவிக்கையில்,

சிவராத்திரி தினத்தன்று பூஜைக்கான ஆயத்தங்கள் செய்துகொண்டிருந்தபோது கல்கி பகவானுடன் இணைந்த அம்பாள் படத்திலிருந்து சந்தனமும், குங்குமமும் வந்துகொண்டிருந்தன. இதையடுத்து பூஜை வழிபாடுகளை முடித்துக்கொண்டு வந்து பார்க்கையில் பகவானின் நெஞ்சிலிருந்து ஒரு ரூபா குற்றியளவில் சந்தனமும், அம்பாளின் நெஞ்சு மற்றும் கழுத்துப் பகுதிகளிலிருந்து குங்குமமும் சொரிந்த வண்ணம் இருந்தன.

இவ் அதிசயம் முற்றாக நின்ற பின்னர் பிரசாதத்தை வழங்குவோம் என்றார். மேலும் சிவராத்திரி தினத்தன்று இவ்வாறான அதிசயங்கள் பெங்களூர் மற்றும் ஓமான் போன்ற இடங்களிலும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு - குறள்

வலம்புரி

# நூறுமீற்றர் தூரமும் அரசியலாகிவிட்டது!

சுனாமியின் பாதிப்பை அடுத்து கரையோரப்பகுதியில் வாழ்ந்த மக்களை கடற்கரையிலிருந்து நூறு மீற்றர் தூரத்திற்கு அப்பால் குடியமர்த்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

எதிர்காலத்தில் கடல்கோள் அனர்த்தம் நிகழ்ந்தால் அதிலிருந்து மக்களை பாதுகாக்கும் நோக்கில் இந்தமுடிபு எடுக்கப்பட்டுள்ளது.

எனினும் அந்தமுடிபுக்கு கரையோரப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்புத்தெரிவித்து வருவதோடு, ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளையும் நடத்தி வருகின்றனர்.

நூறுமீற்றர் தூரத்திற்கு அப்பால் குடியிருப்பது சுயபாதுகாப்பிற்குரியது என்பதை கரையோரப்பகுதி மக்கள் ஏற்றுக்கொண்டாலும் காரணம் எதனையும் முன்வைக்காமல் அந்தத்திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

அரசின் தவறான திட்டங்களை எதிர்ப்பது மக்களின் முதன்மைப் பணியாகும். ஆனால் எதிர்கால நன்மை கருதிய திட்டங்களையும் எதிர்ப்பது மடமைத்தனமாகும்.

இதற்கு நல்லதோர் உதாரணமாக இலங்கையின் பொருளாதாரத்தை கூறலாம். இலங்கையின் அரசியல் வரலாற்றில் மிகச்சிறந்த நிதியமைச்சராக கருதப்பட்டவர் கலாநிதி என்.எம்.பெரேரா. அவர் நிதியமைச்சராக இருந்தகாலத்தில் உள்நாட்டு உற்பத்தி வளங்களை பெருக்குவதற்காக விவசாய உற்பத்தி நடவடிக்கைகளில் படித்த வாலிபர்கள் ஈடுபடுவதை தூண்டுவதற்காக மூடப்பட்ட பொருளாதாரக் கொள்கையை அமுல்படுத்தினார்.

மூடப்பட்ட பொருளாதாரக் கொள்கை என்பது வெளிநாட்டிலிருந்து உணவுப்பொருட்கள் மற்றும் இலங்கையில் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களின் இறக்குமதியை தடைசெய்வதாக அமைந்திருந்தது.

கலாநிதி என்.எம்.பெரேராவின் மூடப்பட்ட பொருளாதாரக் கொள்கையினால், மரவள்ளி முதல் நெல்லுற்பத்திவரை பெருகியது. விவசாயிகள் தமது உற்பத்தி முயற்சியால் பெருலாபம் அடைந்தனர் ஓலைக்குடிசைகளில் வாழ்ந்த விவசாயிகள் கல்வீடுகட்டினர். என்னதொழில் எனக்கேட்கும் போது 'விவசாயம்' எனக்கூறிக் கொள்வதில் படித்த இளைஞர்கள் பெருமைப்பட்டனர். அந்தஅளவிற்கு விவசாயம் முயற்சிக்கேற்ற இலாபத்தை கொடுத்தது.

எனினும் ஊழ்வினைப் பயன்போல் என்.எம்.பெரேராவின் மூடப்பட்ட பொருளாதாரக் கொள்கைக்கு எதிராக ஐக்கியதேசியக்கட்சி பிரசாரம் செய்தது.

இந்த நாட்டிற்கு நன்மைதரக் கூடிய பொருளாதாரக்கொள்கையையே என்.எம்.பெரேரா முன்வைத்துள்ளார் என்பதை ஐக்கியதேசியக் கட்சியினர் உள்ளூர உணர்ந்திருந்தாலும் அவர்களுக்கு நாட்டின் எதிர்கால நன்மை என்பதைவிட கட்சியின் அரசியல்லாபம் என்பதே முதன்மையாகத் தெரிந்தது.

இதனால் மூடப்பட்ட கொள்கைக்கு எதிராக ஐக்கிதேசியக்கட்சி கடும் பிரசாரம் செய்தது. திறந்த பொருளாதாரக் கொள்கையே நாட்டிற்கு நன்மை என்று கோஷம் எழுப்பியது. அறியாமையில் இருந்த மக்கள் போலித்தனமான பிரசாரத்தை நம்பினர். அதன்விளைவாக இன்று உலகநாட்டுப் பொருட்கள் இலங்கையின் சந்தையில் குவிந்துபோக இலங்கையின் விவசாயம் செய்நிலங்கள் தரிசாகிப்போயின.

விவசாயிகள் வறுமைக்குள் சிக்கி தமது தொழிலையேகைவிட்டனர். இந்தபரிதாப நிலை அரசியல் லாபம் தேடப்போய் வந்ததாகும்.

இதேபோன்றுதான் நூறுமீற்றர் தூரத்திற்கு அப்பால் குடியிருப்பதை எதிர்க்க சில அரசியல்கட்சிகள் மக்களைதூண்டிவிட்டுள்ளன. ஆனால் இதன் விளைவு எதிர்காலத்தில் உயிரழிவாக இருக்கும் என்பதை அனைவரும் ஒருகணம் சிந்திப்பது தேவையான தொன்றாகும்.

# தனியார் கல்விக் கூடங்களுக்கும் பட்டச் சான்றிதழ் வழங்க அனுமதி

## ஜே.வி.பியின் எதிர்ப்பையும் மீறி அரசு வழங்கும்

(கொழும்பு)

ஜே.வி.பியின் எதிர்ப்புகளின் மத்தியிலும் தனியார் துறை கல்விக்கூடங்களுக்குப் பட்டச்சான்றி தழ்களை வழங்குவதற்கு அனுமதி அளிப்பது என அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இதற்கான அனுமதிகளை வழங்குவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவிற்கு போதிய அதிகாரம் உள்ளதாக அரசாங் கம் தெரிவித்துள்ளது.

தனியார்துறை கல்விக்கூடங்கள் விருதுகளை வழங்குவதற்கு அனுமதி அளிக்கும் அதிகாரம் 1985 இல் திருத்தியமைக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் சட்டமூலத்தின்படி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு உள்ளது.

பொது நிறுவனங்களுக்கான பாராளுமன்ற குழுவினர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைககுழுவின் அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடாத்தியிருந்தனர். கடந்தவாரம் இடம்பெற்ற இப்பேச்சுக்களின் போது ஜே.வி.பி பிரதிநிதி அவ்வதிகாரிகளுடன் கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

மேற்படி பாராளுமன்றக்குழுவில் அங்கம் வகிக்கும் ஜே.வி. பி பிரதிநிதிகள் பிரதி கிராம கைததொழில் அமைச்சர் சுனில் ஹந்துரெட்டியும், லக்ஷ்மன் நிபுனாராய்ச்சியுமாவார்கள். இவர்கள் இக் கூட்டத்தில் கலநது கொண்டிருக்கவில்லை.

மேற்படி தகவல்களை பல்கலைக்கழக மானி யங்கள் ஆணைக்குழுவின் அங்கத்தவரும் பேராசிரியரு மான எச்.கூப் என்பவர் சண்டேலீடருக்கு தெரிவித்தார். (ப-6)

# சந்திரன் சர்வதேச ஆங்கிலமொழி பாடசாலையின் விளையாட்டு விழா

(கிளிநொச்சி)

சந்திரன் சர்வதேச ஆங்கிலமொழிப் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா நிகழ்வுகள் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில்





கோலாகலமாக ஆரம்பிக்கப்பட்டு மிகவும் சிறப்பாக நிகழ்ந்து நிறைவுபெற்றன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தின் அருகில் அமையப்பெற்றுள்ள சந்திரன் சர்வதேச ஆங்கிலமொழிப் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழாவின் ஆரம்ப நிகழ்வாக குருகுல மாணவர்களின் பான்ட் வாத்திய அணிவகுப்பு மரியா தையுடன் மைதானத்தின் நுழைவாயிலிலிருந்து விருந்தி னர்கள் அழைத்து வரப்பட்டனர்.

இதனையடுத்து பொதுச் சுடரேற்றல் நிகழ்வு இடம் பெற்றது. பொதுச்சுடரினை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி. றெஜியும், கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் கணேசபிள்ளையும், தமிழர் புனர்வாழ்வுக் கழக ஆலோசகர்களில் ஒருவரான திருமதி. ச.மார்க்கிரட்டும் ஏற்றிவைத்தனர்.

இதனைத் தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியினை அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கனும், தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடியினை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உதவி நிறைவேற்றுப் பணிபபாளர் றீகனும், சர்வதேசப் பாடசாலைக் கொடியினை பாடசாலையின் இணைப்பாளர் திருமதி. பா.திலகாவும ஏற்றிவைத்தனர்.

பாடசாலை மாணவர்கள சிறப்புற நடாத்திய அணிவகுப்பு மரியாதையை பிரதம விருந்தினர் ஏற்றுக் கொண்டதையடுத்து மாணவர்களால் ஒலிம்பிக்தீபம் ஏற்றப்பட்டது. மாணவர்களின் விளையாட்டு உறுதியுரை, வரவேற்புரை என்பன ஆங்கிலத்திலும், தமிழிலும் நிகழ்த்தப்பட்டன.

பாடசாலையின் பணிப்பாளர் ராஜகோபால் தலைமையில் இடம்பெற்ற இந்த விழாவிற்கு கிளிநொச்சி அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் கணேசபிள்ளை ஆசியுரையினை வழங்கினார். இதனைத் தொடர்ந்து விளையாட்டு நிகழ்வுகள் இனிது ஆரம்பமாகி நிறைவு பெற்றன. (க)

# தாதிப்பயிற்சி முடித்தவர்களுக்கு பட்டம் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

தாதியர் பயிற்சிப் பாடநெறிகளை பல்கலைக்கழகங்களுடன் இணைத்து அவர்களுக்கு பட்டம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா தெரிவித்தார்.

தாதியர் சபை சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அதனை கூடிய விரைவில் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன், அனைத்து சுகாதார ஊழியர்களுக்கும் வருடாந்தம் வழங்கும் சீருடைக்கான கொடுப்பனவை அதிகரிப்பது குறித்தும் அமைச்சு ஆலோசித்து வருகின்றது என்றும் அமைச்சர் கூறினார்.

அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கப் பிரதிநிதிகளுடன் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை, தாதியர் சேவை தொடர்பாக தாதியர் சங்கத்தினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளில் 6 கோரிக்கைகளுக்குத் தீர்வு காண அமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளார். (க-8)

# கலந்துரையாடல்

(வவுனியா)

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்ட விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர்களுக்கும் வன்னி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையே வன்னி மாவட்டத்தின் பன்முகப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டம் குறித்த கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் மாலை வவுனியா வைரவபுளியங் குளம் மாவட்ட அரசியல்துறைப் பணிமனையில் நடைபெற்றது.

மாவட்ட அபிவிருத்திக்காக ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு 50 இலட்சம் ரூபா அரசினால் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இந்த நிதி ஒதுக்கீட்டை வன்னி மாவட்டத்தின் முக்கிய தேவைகளாகக் கருதப்படுகின்ற கல்வி, சுகாதாரம், மீன்பிடித் தேவைகளுக்கு முன்னுரிமை கொடுத்து ஒதுக்கீடுகள் மேற்கொள்ள இணக்கம் காணப்பட்டதாக பாராளுமன்ற உறுபபினர் சிவநாதன் கிஷோா தொிவித்தார். அவசியமான தேவைகள் இனங்காணப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் முக்கியத்துவம் குறித்து இக்கலந்துரையாடலில வலியுறுத்தப்பட்டுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்களான சிவநாதன் கிஷோர், சிவசக்தி ஆனந்தன், சதாசிவம் கனகரத்தினம் ஆகியோருடன் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்ட விடுதலைப்புலிகளின அரசியல்துறைப் பொறுப்பாளர்களும இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். (க)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

தெய்வபக்தி நிஜமாகவும் ஆழ்ந்தும் இருக்கும் பட்சத்தில் நாமும் கடவுளின் தன்மையைப் பெறமுடியும். நாம் ஒவ்வொருவரும் எல்லையற்ற தன்மை கொண்டவர்கள். அந்தத் தெய்வீக ஆற்றல் நம் ஒவ்வொருவரிடமும் மறைந்திருக்கிறது. தன்னம்பிக்கையை இழக்காதே. இறைவனை அடையும் விஷயத்தில் நீ எந்த வழியைப் பின்பற்றினாலும் நிச்சயமாக உன் இலட்சியத்தை அடைவாய்.

சுவாமி விவேகானந்தர்

# ஆதரவளிக்கா விட்டாலும் அவதூறு செய்யாதிருங்கள்

## பல்கலை ஆசிரியர்களிடம் மருத்துவ மாணவர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த மூன்று மாதகாலமாக தடைப்பட்ட இறுதியாண்டு சத்திர சிகிச்சை கற்கைநெறியை மீள ஆரம்பிக்குமாறு கோரி அமைதியான முறையில் துணைவேந்தரின் அலுவலகத்திற்கு முன்புபோராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மருத்துவ பீடமாணவர்கள் தகாதவார்த்தைப் பிரயோகம் செய்ததாக பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் ஒன்றியத்தால் விடுக்கப்பட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பிரச்சினை தொடர்பாக தெளிவான விளக்கம் அற்றிருக்கும் ஆசிரியர் சங்கம் மாணவர்களது நியாயமான போராட்டத்திற்கு ஆதரவுஅளிக்காததோடு அவர்கள் மீது சேறுபூசும் விதமான அபாண்டமான குற்றச்சாட்டுக்களை சுமத்தும் கபடநோக்கத்தினை எம்மால் புரிந்துகொள்ளமுடியாமல் இருக்கிறது.

மாணவர்நலனில் அக்கறை கொள்ள வேண்டிய ஆசிரியர் சங்கத்தின் இச்செயற்பாடுகள் எமக்கு மிகவும் வேதனை அளிப்பதாக உள்ளன.

மாணவர்களின் நியாயமான போராட்டத்திற்கு ஆதரவுவழங்காவிடினும் எமது போராட்டத்திற்கு இடையூறு ஏற்படுத்தாவண்ணம் இருக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம். எனவும் அவ்வறிக்கையில் வேண்டப்பட்டுள்ளது. (ப)

# நேரம்மாற்றம்

(யாழ்ப்பாணம்)

நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவிருந்த சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான செயன்முறைப் பரீட்சை தவிர்க்கமுடியாத காரணத்தினால் அன்றைய தினம் முற்பகல் 10 மணிக்கு நடைபெறுமென யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வி.பத்மநாதன் அறிவித்துள்ளார். (த)

# சடலம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்ப் பொலிஸாரால சடலம் ஒன்று யாழ்.போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நேற்று கோப்பாயில் நடைபெற்ற நிகழ்வொன்றில் இளைஞன் ஒருவர் நெஞ்சு வலிஏற்பட்டு சிறிது நேரத்தில் அவ்விடத்திலேயே இறந்துள்ளார் எனத்தெரிவித்து இச்சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் வடக்கு கோப்பாயைச்சேர்ந்த எஸ்.பாக்கியநாதன் என்பவரது சடலமே நேற்று 11.30 மணிக்கு ஒப்படைக்கப்பட்டது.(ச-19)

# வயோதிபப்....

கங்கள் பொறிக்கப்பட்ட பதாதைகளை தாங்கிய வண்ணம் பேரணியில் ஈடுபட்டார்கள்.

நல்லூர் ஆலய முன்றலில் ஆரம்பமான இப்பேரணியானது நல்லூர் வீதியூடாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ். அலுவலகத்தைச் சென்றடைந்தது. அங்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ். மாவட்ட வதிவிடப்பிரதிநிதி எரானி பேர்சனிடம் நீர்வேலி திலீபன் சனசமூக நிலையத்தின் தலைவர் சி.செல்வராணியும், கோப்பாய் முன்பள்ளி இணைப்பாளர் எஸ்.புஸ்பரேகாவும் கோரிக்கைகள் அடங்கிய மகஜரைக் கையளித்தார்கள்.

இப்பேரணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, கஜேந்திரகுமார், பத்மினி சிதம்பரநாதன், சிவனேசன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(ச-19,43)

# நள்ளிரவில்....

வருகிறது. எனினும் மேற்படி சம்பவத்திற்கும் தமக்கும் எந்த வித தொடர்பும இல்லையென இராணுவஅதிகாரி பதிலளித்தார்.

இதனால் ஆத்திரமடைந்த பொதுமக்கள அன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் இராணுவ முகாம் வேலியையும் தீக்கிரையாக்கினர்.

இதனைத்தொடர்ந்து பொலிஸாரின் முன்நிலையில் அடையாள அணிவகுப்பொன்று நடத்தப்பட்டது அதில் சிப்பாய்கள் இருவர் அடையாளம் காட்டப்பட்டு பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு ஜீப் வண்டியில் கொண்டு செல்லப்பட்டனர்.

அன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டம் தொடர்பான சம்பவம் நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டபோது தாம் எவரையும் கைதுசெய்ய வில்லையென பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்திருக்கின்றனர்.

இதனைத்தொடர்ந்தே அப்பகுதி மக்கள் பொலிஸார் தம்மை ஏமாற்றி விட்டதாக சீற்றம் அடைந்துள்ளனர். இதனால் அப்பகுதியில் ஒரு வித பதற்றநிலை நீடிப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச.101)

# மருத்துவ பீட மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி

(யாழ்ப்பாணம்)

சத்திரசிகிச்சைப் பிரிவினை மீள ஆரம்பிக்கக்கோரி யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட இறுதியாண்டு மாணவர்கள் நேற்றுப்பேரணியொன்றை நடத்தினர்.

யாழ்.மருத்துவபீடத்தில் இருந்து ஆரம்பிரத்த பேரணி யாழ். பல்கலைக்கழக பிரதான மண்டபத்தை சென்றடைந்தது. பேரணியில் 600க்கும் மேற்பட்ட மருத்துவ பீடமாணவர்கள் கலந்துகொண்டனர்.

பேரணியின் முடிவில் மாணவர்கள் தமது கோரிக்கை அடங்கிய மகஜரை யாழ்.மாவட்ட அரசஅதிபர் கே.கணேஷ் ஊடாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு அனுப்பி வைத்தனர்.

மகஜரின் பிரதியொன்றை இலங்கை மனிதஉரிமை ஆணைக் குழுவின் யாழ்.கிளை இணைப்பாளரிடம் கையளித்தனர். இரு மகஜரையும் மருத்துவபீட மாணவர் ஒன்றியத்தலைவர் ரி.காண்டீபன் கையளித்தார்.

அத்துடன் நேற்று பேரணி முடிவடைந்த பிற்பாடு மருத்துவபீடத்தின் இறுதியாண்டு மாணவர்களை மருத்துவ பீடத்தில் வைத்து பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, கஜேந்திரகுமார், சிவநேசன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் சந்தித்து கலந்துரையாடினார்கள்.

(ச-19.43)

# 10 ஆண்டுகள்....

வந்தபோது வாழ்க்கைச் செலவினைக் குறைப்பது உட்பட பல வாக்குறுதிகளை வழங்கியது.

எனினும் அவ்வாக்குறுதிகள் எதுவும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

தற்போதைய அரசாங்கம் யுத்த நிறுத்தத்தை பற்றி ஏதோவெல்லாம் பேசிவருகின்றது. ஆனால் யுத்தநிறுத்தம் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியின் கீழேயே அமுல்படுத்தப்பட்டது. இதன் மூலம் சமாதானம் மலரத்தொடங்கியது.

யுத்தநிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னரே வறுமை ஒழிக்கப்பட்டது. இந்த உடன்படிக்கைக்கு ஜனாதிபதியும், லக்ஷ்மன் கதிர்காமரும் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர் எனவும் அவர் ஞாபகமூட்டினார். (க-4)

# இராணுவச் சிப்பாய் அடையாளம் காணப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலியில் வயோதிபப்பெண் ஒருவரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முயற்சித்தார் என்று கூறப்படும் இராணுவச்சிப்பாய் அடையாளம் காணப்பட்டார்.

யாழ்.மாவட்ட நீதிமன்றில் நேற்று நடைபெற்ற அடையாள அணிவகுப்பின் போதே அவர் அடையாளம் காட்டப்பட்டார்.

பாதிக்கப்பட்ட பெண்ணும் முதலாம் சாட்சியுமாகிய திருமதி அரியநாயகம் இராசநாயகம், 2ம் சாட்சியான கந்தையா சிவசுப்பிரமணியம் ஆகிய இருவரும் பெருத்துலாகே விமலரட்ண என்ற இராணுவச்சிப்பாயை அடையாளம் காட்டினர்.

யாழ்.மாவட்ட பதில்நீதிவான் கே.கேசவன் முன்னிலையில் நிகழ்த்தப்பட்ட அடையாள அணிவகுப்பின்போது பாதிக்கப்பட்டவரின் சார்பில் சட்டத்தரணி பொன் பூலோகசிங்கம் பாதிக்கப்பட்டவரின் நலனைக்கவனித்தார்.

அடையாளம் காணப்பட்ட சிப்பாயை எதிர்வரும் 28ம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ச-19.74,43)

# சமாதான முயற்சி...

னையடுத்தே இந்தியா சமாதான முயற்சிகளில் அதிக ஈடுபாடு காட்டவேண்டுமென கதிர்காமர் இந்தியாவிடம் வேண்டுகோள் விடுத்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நோர்வே சமாதான ஏற்பாட்டாளர்கள் விடுதலைப் புலிகளுக்கு சார்பாகச் செயற்பட்டு வருகின்றனர். இலங்கையில் தனிநாடு ஒன்றை தமிழ்மக்களுக்கு பெற்றுக்கொடுக்கும் செயற்பாடுகளில் அவர்கள் ஈடுபட்டுள்ளார்கள் என்று ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

இதனால் நோர்வேத் தரப்பை சமாதான முயற்சிகளிலிருந்து விலக்கிவிட்டு விடுதலைப் புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் இந்தியாவை மத்தியஸ்த முயற்சிகளில் ஈடுபடுத்த ஜே.வி.பி விருப்பம் தெரிவித்துள்ளது.

இந்தியா மத்தியஸ்த முயற்சிகளை மேற்கொண்டால் தனிநாட்டுக் கோரிக்கை அல்லது அதற்கீடான தீர்விணைப் பெற்றுக்கொடுக்காதென ஜே.வி.பி நம்பிக்கையை கொண்டுள்ளது.

இலங்கையில் தனிநாடு அல்லது அதற்கீடான கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படுவது இந்தியத் தேசிய ஒருமைப்பாட்டை பாதிக்கும் என்பதோடு, இந்தியாவில் உள்ள பிரிவினைவாத அமைப்புக்களுக்கு சார்பாக அமைந்துவிடும் என்பதால் இந்தியா இலங்கையில் தனிநாடு உருவாவதை ஒருபோதும் விரும்பாதென ஜே.வி.பியினர் கருதுகின்றனர்.

இதனால் இந்தியா சமாதான முயற்சிகளில் ஈடுபடுவதை ஜே.வி.பி. வரவேற்பதாகவும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் ஊடாக அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(த-04)

# புலிகளின் விமானங்களை...

தமிழீழ விடுதலைப்புலிகள் விமானங்களை வைத்திருப்பதால் அரசாங்கமும்,சர்வதேசநாடுகளும் குறிப்பாக இந்தியாவும், அமெரிக்காவும் விழிப்பாகவும் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும்.

விடுதலைப்புலிகளிடம் விமானங்கள் இருப்பதை இந்தியா பார்த்துக்கொண்டு மௌனமாக இருக்கின்றது. அது அவர்களின் பலவீனத்தையே குறிக்கின்றது ஆனால் விடுதலைப் புலிகளின் பலத்தை மேலும் உயர்த்துவதாக அமைகின்றது.

இதனால் விடுதலைப்புலிகளின் விமானங்களை அழிப்பதற்கு இந்தியாவின் உதவியைப் பெற்று அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் அல்லது இந்தியாவே நேரடியாக தலையிட்டு அழிப்பு நடவடிக்கையில் ஈடுபட வேண்டும்.

எல்லாவற்றையும் நாங்கள் பொறுமையாக பார்த்துக்கொண்டிருக்கிறோம் எங்களின் பொறுமை ,எல்லை மீறிப்போக இலங்கை அரசும் இந்தியாவும் வழி செய்யுமானால் நாங்கள் இருதரப்பிற்கும் பாடம் புகட்டவேண்டி ஏற்படும்.

புலிகளின் விமானங்களை அழிக்க முடியாவிட்டால் எங்களிடம் சொல்லுங்கள் அல்லது ஆட்சிப்பொறுப்பை தாருங்கள். நாங்கள் அவர்களின் விமானங்களை ஒரு விநாடியில் அழித்துக்காட்டுவோம் அல்லது ஆயுதங்களை தாருங்கள் நாங்களே வன்னிக்குச் சென்று புலிக்ளின் விமானங்களையும் விமான ஓடுபாதையையும் இருந்த இடம் தெரியாமல் அழித்துக்காட்டுவோம்.

அப்போது எமது பலம் தெரியவரும் இருந்தபோதும் நாங்கள் சமாதானத்தையும் யுத்தநிறுத்தத்தையும் விரும்புகின்றோம். அதற்கு ஆதரவாக குரல்கொடுக்க தயாராக உள்ளோம்.ஆனால் எமக்குள்ள அக்கறை விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இல்லை.

எனவே இந்த சமாதானக் காலத்தை பயன்படுத்தி புலிகள் மேலும் விமானங்களையும் ஆயுதங்களையும் கொள்வனவு செய்வதோடு தமது ஆட்பலத்தையும் பலப்படுத்தி வருகின்றனர்.

இதனை எல்லாம் கட்டுப்படுத்த வேண்டும் அத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தையை விரைவாக ஆரம்பித்து புலிகளின் ஆயுதங்களை களையவேண்டும்.

எனவும் அவர்வேண்டுகோள் விடுத்தார். (த-4)

# மட்டு....

சர்வதேச கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகள் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டனர்.

கடந்த ஆறு மாதங்களுக்குள், இந்த அரசியல் அலுவலகத்தின் மீது நடாத்தப்பட்ட நான்காவது குண்டுத் தாக்குதல் இது என்பது குறிப்பிடத்தக்கது. (ச)


வலி.கிழக்கு பிரதேச சபை
கேள்வி அறிவித்தல்–காலநீடிப்பு

வலம்புரியில் 26.02.2005 ஆம் திகதிய எமது சபையின்
கொல்களம் அமைத்தலிற்கான கேள்வி அறிவித்தல்
பின்வருமாறு காலநீடிப்பு செய்யப்படுகிறது.
கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 21.03.2005 வரை நீடிக்கப்பட்டுள்ளது
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: 30.03.2005 பகல் 12.00 மணிவரை
கேள்விகள் திறந்து ஆராயப்படும் திகதி: 30.03.2005 பி.ப. 3.00 மணி.

வலி.கிழக்குப் பிரதேச சபை, நீர்வேலி.
இராஜரட்ணம் இராஜதுரை (செயலாளர்)

டாக்டர் இராஜ யோகினி நிர்மலா கஜாரியா
(இயக்குனர், பிரம்மகுமாரிகள் இராஜ யோக நிலையம், அவுஸ்ரேலியா, நியூஸ்லாந்து, ஆசிய பசுபிக் பிராந்தியம்)
வழங்கும்
ஆரோக்கியத்திற்கும் வெற்றிக்குமான மனோ ஆற்றல்
இடம் : கைலாசபதி கலையரங்கு, யாழ். பல்கலைக்கழகம்.
காலம் : 16.03.2005 (புதன்கிழமை)
நேரம் : மாலை 4.00 - 5.30
தமிழ் நேரடி மொழிபெயர்ப்பு வழங்கப்படும்
அனைவரையும் பேரன்புடன் அழைக்கின்றோம், நன்றி
(9397)

ராஜா யாழ்ப்பாணம்
12/03/05 தொடக்கம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
பிரசாந், வடிவேலு அங்கீதா நடித்த

லண்டன்
ரிக்கற்றுக்களை முன்பதிவு செய்து கொள்ளுங்கள். (பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30

நாதன்ஸ் சினிமா
குளிரூட்டியது
யாழ்ப்பாணம் [ஆஸ்பத்திரிக்கு முன்பாக]
14-03-2005 முதல்
அனு, சேகர், பிரசன்னா, ஸ்ருதிராஜ், வடிவேலு நடித்த
காதல் டாட் காம்
தினசரி 10.30, 2.30 6.30, 9.30
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின எமது அடுத்த வெளியீடு
தாவடி மைந்தன் நடிக்கும் குருதேவா
விரைவில் எதிர்பாருங்கள்

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், திரிஷா, சாயாசிங் மற்றும் பலர் நடித்த

திருப்பாச்சி
கா.நே 11.00, 2.45, 6.00(பு.நே)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.03.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.